நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**கரும்புக்கு நியாயமான ஆதார விலை: முதல்வர் கருணாநிதி**

First Published : 19 Feb 2010 12:00:00 AM IST

சென்னை, பிப்.18: ""கரும்புக்கு நியாயமான ஆதார விலையை தமிழக அரசு அளித்து வருகிறது'' என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார். இதைப் பாராட்டுவதற்குப் பதிலாக உண்மையை அறியாமல் அறிக்கை வெளியிட்டு இருப்பது அரசியல் உள்நோக்கம் கொண்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து, வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

""கரும்பு விவசாயிகள் சங்க கூட்டமைப்பினர் வெளியிட்ட அறிக்கையில் தமிழகத்தில் முன்னாள் ஆட்சியில் அரசு ஆதரவு விலை அளிக்காமல் இருந்தது தவறு என்று சுட்டிக் காட்டுவதோடு, பிற மாநிலங்களில் ரூ.2,100 முதல் ரூ.2,300 வரை கொடுக்கிறார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விலையைச் சொல்லி இருக்கிறார்களே தவிர, அங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற கரும்பின் ""பிழிதிறன்'' என்ன என்பதைப் பற்றி விவரிக்கவில்லை. கரும்புக்கு விலை அதிகம் கொடுக்க வேண்டுமென்று கேட்கின்ற விவசாயிகள் யாரிடம் கேட்கிறார்கள்? அரசிடம் கேட்கிறார்களா? அல்லது கரும்பை வாங்கி அரவை செய்து சர்க்கரையாக விற்பனை செய்கின்ற ஆலை அதிபர்களிடம் கேட்கிறார்களா? என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கரும்பு விவசாயிகள் கேட்கிற விலையை அறிவித்து விட அரசு தயாரானால் கூட, அந்த விலை கொடுக்க தங்களுக்குக் கட்டுப்படி ஆகவில்லை என்று திட்டவட்டமாகக் கூறுகின்ற சர்க்கரை ஆலைகளின் கூக்குரலுக்கு அரசு என்ன பதில் சொல்ல வேண்டும்?

என்ன பதில் சொன்னால் அந்தக் கூக்குரல் அடங்கும் என்பதையோ அல்லது கரும்பு விலை அறிவிப்பு என்பது அந்த விலையை அரசு, கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்கப் போகிற விலை என்றோ பொருள் அல்ல; அப்படி கூட்டுறவு ஆலைகளுக்காக அரசே கொடுக்க முன் வந்தால் கூட அதே போன்ற விலையை தனியார் ஆலை அதிபர்கள் தங்களுக்குக் கட்டுப்படி ஆகாது என்று கூறினால் அதனால் பாதிக்கப்படப் போவது கரும்பு விவசாயிகள் தானே?

**சர்க்கரை உற்பத்தி...**சர்க்கரைத் தொழிலில் உற்பத்தி சில ஆண்டுகளில் அதிகமாக இருக்கும். சில ஆண்டுகளில் குறைவாக இருக்கும். அது மாறி மாறி வருவதாகும். சர்க்கரை உற்பத்தி அதிகமாக இருந்து சர்க்கரையின் விலை குறைவாக இருந்து கூட்டுறவு ஆலைகள் நட்டத்தில் இயங்கிய நேரத்திலும் மத்திய அரசு அறிவிக்கின்ற குறைந்தபட்ச விலையை விட கூடுதலாக மாநில அரசின் ஆதார விலையை அரசு உறுதி செய்துள்ளது.

2008-2009-ம் ஆண்டில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் ஒட்டு மொத்த குவிந்த நட்டம் ரூ.1,625 ஆகும். ஆனாலும், கரும்பு விவசாயிகளின் நலன் கருதி தமிழக அரசு அவர்களுக்கு தொடர்ந்து நியாயமான ஆதார விலையை அளித்து வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் கூட்டுறவு ஆலைகள் கொள்முதல் செய்யும் கரும்புக்கு கூடுதலாகவே விலை நிர்ணயம் செய்யும் அரசின் கொள்கையைப் பாராட்ட வேண்டும். ஆனால், இந்த உண்மையை அறியாதது போல அறிக்கை விடுத்திருப்பது அரசியல் உள்நோக்கம் கொண்டது" என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

**யூரியா விலை 10% உயரும்: அழகிரியின் யோசனை நிராகரிப்பு**

First Published : 19 Feb 2010 12:54:35 AM IST

Last Updated : 19 Feb 2010 03:42:54 AM IST

புது தில்லி, பிப்.18: யூரியா சில்லரை விற்பனை விலையை 10 சதவீதம் உயர்த்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. யூரியா விலை உயர்வு ஏழை மற்றும் நடுத்தர விவசாயிகளை பாதிக்கும் என்பதால் அதனை ஓராண்டு ஒத்திப் போட வேண்டும் என்று அமைச்சரவைக் கூட்டத்தின் போது அழகிரி வலியுறுத்தினார். ஆனால் அவரது யோசனை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டம் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் தில்லியில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் ரசாயனம் மற்றும் உரத் துறை அமைச்சர் அழகிரி, ஜவுளித் துறை அமைச்சர் தயாநிதி மாறன் உள்பட அமைச்சர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதில் உரத் துறை அமைச்சகம் தொடர்பான, யூரியா விலையை 10 சதவீதம் அளவுக்கு உயர்த்துவது, ஊட்டச் சத்து உரத்துக்கான மானியம் தொடர்பான மத்திய அமைச்சரவையின் முடிவு குறித்து அழகிரி பேச வேண்டியிருந்தது.

இந்த விஷயம் குறித்து அழகிரிக்கு பதிலாக தயாநிதி மாறன் ஆங்கிலத்தில் பேசியதாகத் தெரிகிறது.

சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக விவாதம் நடைபெற்றது. ஊட்டச் சத்து உரங்களுக்கு மானியம் அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்பு பட்ஜெட்டில் வெளியாகும். பின்னர் வரும் நிதி ஆண்டிலிருந்து அதாவது ஏப்ரல் 1-ம் தேதி முதல் இது அமல்படுத்தப்படும்.

இத்துடன் டை அம்மோனியம் பாஸ்பேட் (டிஏபி) மற்றும் பொட்டாஷ் (எம்ஓபி-மியூரியேட் ஆப் பொட்டாஷ்) உரத்துக்கான விலையை உர நிறுவனங்களே நிர்ணயித்துக் கொள்ள மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

தற்போது யூரியாவின் அதிகபட்ச சில்லரை விலை ஒரு குவிண்டால் ரூ. 483 ஆக உள்ளது. அம்மோனியா உரத்தின் விலை குவிண்டாலுக்கு ரூ. 935 ஆகவும் பொட்டாஷ் விலை குவிண்டாலுக்கு ரூ. 445.50 ஆகவும் உள்ளது. அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதால் நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாஷ், கந்தகம் உள்ளிட்ட ஊட்டச் சத்து உரங்களுக்கு மானியம் கிடைக்கும். இருப்பினும் மிகவும் அதிக அளவில் பயன்படுத்தப்படும் யூரியா உரத்தின் அதிகபட்ச விற்பனை விலையை அரசே நிர்ணயிக்கும்.

ஏர் இந்தியாவுக்கு ரூ. 800 கோடி: நஷ்டத்தில் இயங்கும் ஏர் இந்தியா நிறுவனத்துக்கு ரூ. 800 கோடி நிதி அளிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை இரண்டு தவணைகளில் வழங்கப்படும்.

**முதுநிலை மருத்துவ படிப்பு:** மருத்துவ கல்லூரிகளில் முதுநிலை மருத்துவப் படிப்புக்கு தற்போது உள்ள இடங்களைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையிலான மாணவர்களைச் சேர்க்க அனுமதிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. நாட்டில் தற்போது உள்ள 148 மருத்துவ கல்லூரிகளுக்கும் இந்த அனுமதி பொருந்தும். இதன் மூலம் ஆண்டுக்கு 5,000 மாணவர்கள் கூடுதலாக முதுநிலை படிப்பைத் தொடர வழி ஏற்பட்டுள்ளது. இது தவிர, மாநில மருத்துவக் கல்லூரிகளுக்கு ஒருமுறை வழங்கும் உதவித் தொகைக்கு ரூ. 1,350 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**குறைந்து வரும் நிலக்கடலை சாகுபடி**

First Published : 19 Feb 2010 12:32:00 AM IST



விழுப்புரம், பிப்.18: முக்கிய எண்ணெய் வித்துப் பயிரான நிலக்கடலையின் விலை, கடந்த ஓராண்டாக தேக்க நிலையை சந்தித்து வந்துள்ளது. நிலக்கடலைக்கு கரீப் (ஏப்ரல்-செப்டம்பர்) முக்கியமான பருவமாகும். நமது நாட்டில்

2008-09-ம் ஆண்டு கரீப் பருவத்தில் 42.2 லட்சம் டன்னாக இருந்த நிலக்கடலை உற்பத்தி, 2009-10-ல் 32.4 லட்சம் டன்களாக குறைந்துள்ளது. இது சுமார் 20 சதவீத சரிவாகும்.

தமிழ்நாட்டில் நிலக்கடலை சாகுபடி சுமார் 5 லட்சம் ஹெக்டரில் மேற்கொள்ளப்பட்டு, நிலக்கடலை உற்பத்தியில் 16 சதவீதப் பங்கை அளிக்கிறது. இதில் 70 சதவீதம் சாகுபடி மானாவாரிப் பயிராகவும், 30 சதவீதம் பாசனப்பயிராகவும் பயிரிடப்படுகிறது. கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் அரியலூர் மாவட்டங்கள் தமிழ்நாட்டின் முக்கிய உற்பத்தி மாவட்டங்களாகும். சந்தைத் தகவலின்படி, நிலக்கடலை சாகுபடிப் பரப்பு தமிழகத்தில் மட்டுமல்லாமல் நாட்டின் மற்ற பகுதிகளிலும் குறைந்துள்ளது.

இந்த ஆண்டு மழை பற்றாக்குறைவால், உற்பத்தித் திறனும் குறைந்துள்ளது. மேலும் விவசாய வேலையாள்கள் பற்றாக்குறைவால், விவசாயிகள் நிலக்கடலைப் பயிருக்கு பதிலாக மக்காச்சோளம் உள்ளிட்ட மாற்றுப் பயிருக்கு மாறியுள்ளனர் என வேளாண் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குறைந்த நிலக்கடலை உற்பத்தி, அதிகரித்துள்ள தேவை, பனை எண்ணெய் இறக்குமதி போன்ற காரணங்களால் நிலக்கடலை விவசாயிகள், நல்ல விலை கிடைக்க இருப்பில் உள்ள நிலக்கடலையை வைத்திருக்கலாமா அல்லது உடனே விற்கலாமா என்று யோசனை செய்து வருகின்றனர். இதுகுறித்து விழுப்புரம் வேளாண்வணிக துணை இயக்குநர் என். தனவேல் கூறியது: தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், தமிழகத்தில் நிலக்கடலையின் முக்கிய இடமாக விளங்கும் சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் 15 ஆண்டு விலைத் தகவலை ஆய்வு செய்தது. இதன்படி கடந்த ஆண்டை ஒப்பிடும்போது, குறைந்துள்ள நிலக்கடலையின் சாகுபடி பரப்பு, விலையை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. உலக அளவில் பனை எண்ணெய் உற்பத்தி குறைய வாய்ப்புகள் இருந்தாலும், அதை சோயாவின் அதிக உற்பத்தி ஈடுகட்டும். மேலும் பனை எண்ணெய் கையிருப்பு, பருத்தி மற்றும் நெல் உமி எண்ணெய்களின் உபயோகம் போன்றவை நிலக்கடலை விலையை ஏற விடாது.

எனவே நிலக்கடலை (உடைக்காததின்) பண்ணை விலை பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை குவிண்டாலுக்கு ரூ.2,900 முதல் ரூ.3,100 வரை கிடைக்கும். மே, ஜூன் மாதங்களில் ரூ.100 முதல் ரூ.200 வரை குவிண்டாலுக்கு அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதே போக்கு நிலக்கடலைப் பருப்பிலும் காணப்படும். மத்திய அரசு பனை எண்ணெய்க்கு இறக்குமதி

வரி விதித்தால், விலை சற்றே ஏற வாய்ப்புள்ளது. மேலும் பனை எண்ணெய் இறக்குமதி செய்தால் விலை சரியக்கூடும். எனவே விவசாயிகள் தங்களிடம் உள்ள நிலக்கடலையை உடனே விற்று நல்ல லாபம் அடையலாம் என்றார்.

**நெல் கொள்முதல் செய்ய அரசுக்கு விவசாயிகள் வலியுறுத்தல்**

First Published : 19 Feb 2010 06:27:11 AM IST

தேனி, பிப்.18: பெரியகுளம் வட்டாரத்தில் அறுவடை செய்யப்பட்டுள்ள நெல்லை உடனடியாக அரசு கொள்முதல் செய்ய வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

பெரியகுளம் வட்டாரத்திலுள்ள வடுகபட்டி, மேல்மங்கலம், தாமரைக்குளம், ஜெயமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் தற்போது நெல் அறுவடை நடந்து வருகிறது.

அறுவடை செய்யப்பட்ட நெல், நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் 60 கிலோ எடையுள்ள மூடை ரூ.620-க்கு கொள்முதல் செய்யப்பட்டது.

சில நாள்களாக நெல் கொள்முதல் நிறுத்தப்பட்டு, அறுவடை செய்த நெல்லை விவசாயிகள் களத்தில் கொட்டி வைத்து காவல் காத்து வருகின்றனர்.

தமிழக விவசாயிகள் சங்கம் பெரியகுளம் வட்டார செயலாளர் முருகன் கூறியதாவது: நுகர் பொருள் வாணிபக் கழகம் நெல் கொள்முதல் செய்யாததால் வியாபாரிகள் மூடை ஒன்றுக்கு ரூ.620-க்கு கொள்முதல் செய்கின்றனர்.

விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாத வகையில் அரசு சார்பில் நெல் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**விவசாயிகளுக்கான நுகர்வோர் விழிப்புணர்வு பயிற்சி முகாம்**

First Published : 19 Feb 2010 07:26:50 AM IST

அரியலூர், பிப். 18: அரியலூர் மாவட்ட உணவுப் பொருள் வழங்கல் மற்றும் பாதுகாப்புத் துறை சார்பில், விவசாயிகள், விவசாயம் சார்ந்த நுகர்வோர்களுக்கான விழிப்புணர்வு பயிற்சி முகாம் அரியலூரில் வியாழக்கிழமை நடைபெற்றது. முகாம் தொடக்க விழாவுக்கு மாவட்ட வழங்கல் அலுவலர் க. நாகராஜன் தலைமை வகித்து பேசியது:புதிதாக குடும்ப அட்டை வழங்க, அரசு நிபந்தனைகள் விதித்துள்ளன. இதன்படி, அசல் குடும்ப அட்டையுடன் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு 60 நாள்களில் குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்றார் அவர். அரியலூர் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுத் தலைவர் வழக்குரைஞர் ஆர். பாஸ்கரன், வழங்கல் துறை கண்காணிப்பாளர் ச. வைத்தியநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமில் அரியலூர் வட்டத்தைச் சேர்ந்த 57 விவசாயிகள்

பங்கேற்றனர். இதில் வேளாண் அலுவலர் கே. அர்ச்சுனன், விவசாயிகளுக்கான நுகர்வோர் விழிப்புணர்வு தொடர்பாக பயிற்சியளித்தார். விழாவில் வட்ட வழங்கல் அலுவலர்கள் கே. ராம்சந்தர், எஸ். முகந்தன், கே. ராகவன், பறக்கும்படை வட்டாட்சியர் ஜோசப் பிரபாகரன், வழங்கல் துறை உதவியாளர் சிவசுப்பிரமணியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### செம்மை நெல் அறுவடை தின விழா

First Published : 19 Feb 2010 07:34:07 AM IST

திருவெறும்பூர், பிப். 18: திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் அருகே உள்ள நவல்பட்டு விவசாயி பார்த்திபன் வயலில் செம்மை நெல் அறுவடை தின விழா வியாழக்கிழமை நடைபெற்றது. விழாவிற்கு நவல்பட்டு ஊராட்சித் தலைவர் கயல்விழி தலைமை வகித்தார். திருச்சி வேளாண் இயக்குநர் பொன்னுசாமி முன்னிலை வகித்துப் பேசியது:

அடுத்த ஆண்டு செம்மை நெல் சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் மானியம் முழுமையாகக் கிடைக்கும் வகையில் செயல்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றார் அவர். மாநில வேளாண் திட்ட துணை இயக்குநர் ராம்குமார் கலந்து கொண்டு, செம்மை நெல் சாகுபடியில் கதிர்களின் எண்ணிக்கை கூடுவது, மகசூல் இரட்டிப்பாவது குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். பார்த்திபன் வயலில் வியாழக்கிழமை நடைபெற்ற அறுவடையில் ஏக்கருக்கு 50 மூட்டை மகசூல் கிடைத்தது. நிகழ்ச்சியில், திருவெறும்பூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ரவி, வேளாண்மை அலுவலர்கள் உஷா ராணி, இசபெல்லா, சரவணன், திருகுமரன், கவுன்சிலர் சித்திரவேல், குமுளூர் வேளாண் பொறியியல் கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். முன்னதாக உதவி அலுவலர் அமல்ராஜ் வரவேற்றார். நிறைவாக வேளாண் உதவி அலுவலர் ஜனார்த்தனன் நன்றி கூறினார்.

## தினமலர்

### டன்னுக்கு ரூ.480 வரை யூரியா விலை அதிகரிப்பு

விவசாயிகள் தங்கள் தொழிலுக்கு பயன்படுத்தும் முக்கிய பொருளான யூரியாவின் விலை உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது, டன் ஒன்றுக்கு ரூ. 4,830 ஆக இருக்கும் யூரியாவின் விலை ரூ.5,310 ஆக உயர்த்தப்படவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.மத்திய அமைச்சரவையின் கூட்டம்,பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் டில்லியில் நேற்று

நடைபெற்றது. விவசாயத் தொழிலில் முக்கிய பங்கு வகிக்கும் பொருளான யூரியாவின் விலையை அதிகரிப்பது குறித்து விவாதிக்கப்படும் என்று கூறப்பட்டதால், கூட்டத்தின் முடிவுகள் குறித்து அறிவதில் மிகுந்த பரபரப்பு காணப்பட்டது.


மூன்று மணி நேரம் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு பிறகு, நிருபர்களை மத்திய அமைச்சர் அம்பிகா சோனி சந்தித்தார். அப்போது அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து விளக்கிப் பேசியதாவது:ஒருமனதாக முடிவு: யூரியாவின் விலை தற்போது டன் ஒன்றுக்கு ரூ.4,830 வரை விலை நிர்ணயிக்கப்பட்டு இருந்து வருகிறது. இதை, ரூ.5,310 ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விலை அதிகரிப்பு குறித்து எடுக்கப்பட்ட முடிவு என்பது ஒருமனதாக எடுக்கப்பட்ட தாகும். குறிப்பாக ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் பங்கு வகிக்கும் அனைத்து கட்சிகளும் ஒருமனதாக ஒப்புக்கொண்ட ஒன்றாகும். இந்த முடிவு எடுக்கப்பட்டபோது மத்திய உரத்துறை அமைச்சர் அழகிரியும் இருந்தார். விலை அதிகரிப்பு நடவடிக்கை வரும் ஏப்ரல் 1ம் தேதி முதல் அமலாகும். உரம் தொடர்பாக மத்திய அரசு புதிய கொள்கை ஒன்றை வகுத்துள்ளது.

தற்போது, உரங்களுக்கு அளிக்கப்படும் மானியம் என்பது இனிமேல் அதில் கலந்துள்ள ஊட்டச்சத்துக்களின் அடிப்படையில் அளிக்கப்படும். சர்வதேச சந்தையில் நிலவும் நிலவரங்களுக்கு ஏற்ப உரம் விலை நிர்ணயிக்கப்படும்.எப்போதெல்லாம் தேவைப்படு கிறதோ அந்தந்த சூழ்நிலைகளைப் பொறுத்து விலை நிர்ணயம் இருக்கும். இருப்பினும் உரத்தின் விலை உயராமல் மத்திய அரசு பார்த்துக் கொள்ளும். தவிர, யூரியா தவிர்த்த பிற உரங்களின் விலை உயர்த்தப்படாமல் இருக்க மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளும். கடந்து ஆண்டு மட்டும் உரத்திற்கு மானியம் வழங்கிய வகையில் ரூ.56 ஆயிரம் கோடி வரை அளிக்கப்பட்டுள்ளது.இவ்வாறு அம்பிகா சோனி தெரிவித்தார்.

**தக்காளி விலை கிலோ 50 காசு: ராயலசீமாவில் வாங்க ஆளில்லை**

பிப்ரவரி 19,2010,00:00 IST



நகரி:ஆந்திராவில் தக்காளி யை வாங்க வியாபாரிகள் முன்வராததால், மாடுகளுக்கும், குப்பை தொட்டியிலும் விவசாயிகள் கொட்டி வருகின்றனர்.ஆந்திர மாநிலம், ராயலசீமா பகுதியிலுள்ள சித்தூர் மாவட்ட மதனபள்ளியில் 18 ஆயிரம் ஏக்கர், கர்நூல் மாவட்ட எம்மிகனூரில் 17 ஆயிரம் ஏக்கர், கடப்பா மாவட்டத்தில், 6,000 ஏக்கரிலும் தக்காளி பயிர் செய்யப்பட்டுள்ளது.கடந்த நவம்பர், டிசம்பர் வரை, கிலோ 25 முதல் 30 ரூபாய்க்கு விற்பனையான தக்காளி, தற்போது ஒரு ரூபாயிலிருந்து 50 பைசாவுக்கு, விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. 100 கூடை தக்காளி அறுவடை செய்ய, ஆறு பேருக்கு தலா 60 ரூபாய் கூலி மற்றும் வாகன செலவாக 225 ரூபாய் ஆகிறது. இதனால், தக்காளியை மாடுகளுக்கும், குப்பையிலும் விவசாயிகள் கொட்டி வருகின்றனர்.

### திருமானூர் பகுதியில் சம்பா அறுவடை தீவிரம்

திருமானூர்:திருமானூர் பகுதியில் சம்பா நெல் அறுவடை பணிகள் முழு வீச்சில் நடந்து வருகிறது.அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றிய பகுதி தஞ்சை மாவட்ட டெல்டா பகுதிகளை போல விவசாய பகுதியாகும். புள்ளம்பாடி வாய்க்கால், சுக்கிரன் ஏரி, நந்திஆறு வாய்க்கால் ஆகியவற்றின் மூலம் இப்பகுதியை சேர்ந்த ஏராளமான வயல்கள் பாசன வசதி பெறுகின்றன. மேலும் மின் மோட்டார், ஆயில் மோட்டார் கிணற்றுபாசனம் மூலம் ஏராளமான வயல்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்த வகையில் இந்த ஆண்டு 7 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் 4 ஆயிரத்து 500 எக்டேர் சம்பா சாகுபடியாகும். 3 ஆயிரம் எக்டேர் தாளடி சாகுபடியாகும். மேலும் 2 ஆயிரம் எக்டேரில் செம்மை நெல் சாகுபடி செய்யப்பட்டது. தற்போது இந்த பணிகள் நிறைவடைந்து சம்பா நெல் பயிர்கள் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன. கடந்த சில தினங்களாக இப்பகுதியில் சம்பா நெல் சாகுபடி பணிகள் மிக தீவிரமாக நடந்து வருகிறது. நெல் அறுவடை பணிக்கு ஆட்கள் பற்றாக்குறை காணப்படுவதால் நெல் அறுவடை இயந்திரங்கள் மூலமும் அறுவடை பணிகள் முழு வீச்சில் நடந்து வருகிறது. ஒரு ஏக்கருக்கு 1,800 கிலோ நெல் விளைச்சல் கிடைப்பதாக இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

### விதை வினியோகத்தில் தனியார் நிறுவனங்களின் ஆதிக்கம் : அனுமதிக்க முடியாது என்கிறார் ஜெய்ராம் ரமேஷ்

கோவை : ""இந்திய விவசாயிகள் பயன்படுத்தும் விதை வினியோகத்தில் வெளிநாட்டு, உள்நாட்டு தனியார் கம்பெனிகளின் ஆதிக்கத்தை அனுமதிக்க முடியாது,'' என, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் கூறினார்.

கோவையில் ஜெய்ராம் ரமேஷ் அளித்த பேட்டி:இந்தியாவில் 11,200 புலிகள் உள்ளன. இதில் ஐந்து சதவீதம் சரணாலயங்களில் உள்ளன. 38 புலி சரணாலயங்கள் உள்ளன. கேரள மாநிலம் பரம்பிக்குளத்தில் அமையவுள்ள சரணாலயத்தை சேர்த்து சரணாலயங்களின் எண்ணிக்கை 39 ஆக உயரும். சுரங்கம் தோண்டுபவர்கள், ரியல் எஸ்டேட் அதிபர்களால் புலிகளின் வாழ்விடங்கள் பாதிக்கப்படுகின்றன. புலிகள் அழிவின் விளிம்பில் உள்ளன. ஆண்டுக்கு 30 புலிகள் இறக்கின்றன. கடந்த ஆண்டு மட்டும் 60 புலிகள் இறந் துள்ளன. புலிகளை நாம் காப்பது, வனத்தின் பல்லுயிர் பெருக்கத்தை காப்பதற்கும்தான் என்பதை மறந்து விடக் கூடாது. வனம்தான் மருத்துவ மூலிகை தாவரங்கள், தண்ணீரின் ஆதாரம். தற்போது யானைகளின் எண்ணிக்கை அதிகரித்து வந்தாலும், புலிகளுக்கு இணையான முக்கியத்துவம், யானைகளை காப் பதற்கும் தேவை. இந்தியாவில் 25 ஆயிரம் யானைகள் உள்ளன. இதில் 70 சதவீதம் கேரளா, தமிழகம், கர்நாடகா, ஆந்திர மாநிலங்களில் உள்ளன.

பி.டி. கத்தரி பற்றிய பாதுகாப்பு ஆய்வுகள் தொடரும். இந்திய விவசாயிகள் பயன்படுத்தும் விதை வினியோகத்தில் வெளிநாட்டு, உள்நாட்டு தனியார் கம்பெனிகளின் ஆதிக்கத்தை அனுமதிக்க முடியாது. சுற்றுச்சூழல் பிரச்னைகளுக்கு தீர்வு காண, விரைவில் "தேசிய பசுமை தீர்வாணையம்' அமைக்கப்படவுள்ளது. இதற்கான சட்டம் வரும் பட்ஜெட் தொடரில் நிறைவேற்றப்படலாம். டில்லியில் 2 ஏக்கர் பரப்பளவில், 100 கோடி ரூபாய் செலவில் சுற்றுச்சூழல் துறையின் அலுவலகம் பசுமைக் கட்டட அடிப்படையில் அமையவுள்ளது. 60 சதவீத மின்சார சிக்கனம், தண்ணீர் சுத்திகரிப்பு இதன் சிறப்பு அம்சம். கட்டுமான பணிகள் ஏப்ரலில் துவங்கி, 2011 அக்டோபரில் முடியும். நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகளிலும் கட்டட கட்டுமான விதிமுறைகளில் "பசுமை கட்டட' முறையை உட்படுத்த வேண்டும். இவ்வாறு, ஜெய்ராம் ரமேஷ் கூறினார்.

### மரபணு மாற்றிய விதைக்கு நிரந்தர தடை விதிக்க வேண்டுகோள்

அரூர்: "மரபணு மாற்று விதைகளுக்கு இந்தியாவில் நிரந்தர தடை விதிக்க வேண்டும்' என தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்க மாநில செயற்குழு கூட்டம் மாநிலத் தலைவர் பழனிசாமி தலைமையில் அரூர் மார்க்சிஸ்ட் கட்சி அலுவலகத்தில் நடந்தது. "மரபணு மாற்று விதைகளை பயன்படுத்துவதன் மூலம் மனிதர்களுக்கு மலட்டு தன்மை ஏற்படும் என டாக்டர்கள் எச்சரிக்கின்றனர்.

எனவே மரபணு மாற்று விதைகளை இந்தியாவில் பயன்படுத்த நிரந்தரமாக தடை விதிக்க வேண்டும். மலை பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பட்டா வழங்க விதிக்கப்பட்டுள்ள தடை எண் 1168ஐ ரத்து செய்ய வேண்டும்.வன உரிமைச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும்' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர். மாநில பொதுச் செயலாளர் சண்முகம், துணைத் தலைவர் எம்.எல்.ஏ., டில்லிபாபு,பொருளாளர் அழகேசன், விவசாய சங்க மாநித் தலைவர் பாலகிருஷ்ணன் உட்பட பலர் கலந்துக்கொண்டனர். தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்க புதிய நிர்வாகிகள் தேர்வு நடந்தது. மாநில

தலைவராக சண்முகம், மாநில பொதுச் செயலாளராக பழனிசாமி, துணைச் செயலாளர்கள் பொன்னுசாமி, அண்ணாமலை ஆகியோரை ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

### தக்காளி,கோஸ் கிலோ ரூ.5 குண்டு மாங்காய் 80 ரூபாய்

திண்டுக்கல்:சில வாரங்களாக பெரும்பாலான காய்கறிகளின் விலை குறைந்து வருகிறது.திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டில், தக்காளி கடந்த வாரம் கிலோ 16 ரூபாய்க்கும்,முட்டைக்கோஸ் 12 ரூபாய்க்கும் விற்றது. நேற்று இவற்றின் விலை குறைந்து, கிலோ ஐந்து ரூபாயாக இருந்தது. முருங்கைக்காய், அவரைக் காய், வெங்காயம் ஆகியவற்றின் விலையும் சரிந் துள்ளது. நேற்றைய நிலவரப்படி சின்னவெங்காயம் 14, பெல்லாரி வெங்காயம் 22, பீட்ரூட் 16, வெண்டைக் காய் 14, பீன்ஸ் 16, பட்டர் பீன்ஸ் 60, சோயா பீன்ஸ் 50, முள்ளங்கி 8, கேரட் 18, பாகற்காய் 15, முருங்கைக் காய் 60, அவரைக்காய் 14 ஆகிய விலைகளில் இருந்தன. சில வகை காய்கறிகளின் விலை, கடந்த வாரத் தை விட அதிகரித்துள்ளன. 22 ரூபாயாக இருந்த கத்தரி 28 ஆகவும், 40 ரூபாயாக இருந்த குண்டுமாங்காய் 80 ஆகவும், 20 ரூபாயாக இருந்த உருளைக்கிழங்கு 28 ஆகவும் உயர்ந்துள்ளது.

### நெல் கொள்முதல் மையம் திறப்பு

திண்டுக்கல் : திண்டுக்கல் மாவட்டத் தில் நான்கு இடங்களில் நெல் கொள்முதல் மையங் கள் திறக்கப் பட்டுள்ளன.நிலக்கோட்டை தாலுகா விளாம்பட்டி, ஆத்தூர் தாலுகாவில் ஆத்தூர், சித்தையங்கோட்டை, பழநியில் பாலசமுத்திரத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் நேரடி நெல் கொள்முதல் மையங் களை திறந்துள்ளது.நெல் குவிண்டாலுக்கு 1030 ரூபாய் விலையும் 70 ரூபாய் ஊக்கத்தொகையும் வழங்கப்படுகிறது.பொதுரக நெல் குவிண்டாலுக்கு ஆயிரம் ரூபாய் விலையும்,50 ரூபாய் ஊக்கத்தொகையும் வழங்கப்படுகிறது. விரைவில் நடமாடும் நெல் கொள்முதல் மையங் கள் திறக்கப்பட உள்ளதாகவும்,விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என கலெக்டர் வள்ளலார் தெரிவித்தார்.

### செம்மை நெல் சாகுபடி அறுவடை விழா

திருவெறும்பூர்: திருவெறும்பூர் அருகே பூலாங்குடி கிராமத்தில் முன்னாள் பஞ்சாயத்து தலைவரும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலரான சாமிநாதன் வயலில் செம்மை நெல் சாகுபடி அறுவடை விழா நடந்தது. விழாவில் வேளாண் இணை இயக்குனர் பொறுப்பு ராம்குமார் தலைமை வகித்தார். பழங்கனான்குடி பஞ்., தலைவர் மணிமேகலை, வேளாண் உதவி அலுவலர்கள் சரவணன், இசபெல்லா, திருக்குமரன், ஹேமா ஆகியோர் முன்னிலை வகித்தனர். உதவி அலுவலர் அமல்ராஜ் வரவேற்றார். இதில், இணை இயக்குனர் அறுவடையை தொடங்கி வைத்து பேசுகையில், ""செம்மை நெல் சாகுபடியில் கதிர்களின் எண்ணிக்கை, மண்களின் எடை எவ்வாறு கூடுகிறது?" என்பது குறித்து கூறினார்.

திருவெறும்பூர் வேளாண் உதவி இயக்குனர் ரவி பேசுகையில், ""உர நிர்வாகம், முறையாக மேற்கொண்டால் மகசூலை இரட்டிப்பாக்கலாம்," என்று ஆலோசனை வழங்கினார்.

வேளாண் அலுவலர் உஷாராணி பேசுகையில், ""இரட்டிப்பு மகசூல் பெற விவசாயிகள் கையாள வேண்டி முறைகள்," பற்றி பேசினார். விவசாய சாமிநாதன் தனது அனுபவம் பற்றி கூறுகையில், ""செம்மை நெல் சாகுபடியில் ஒற்றை நாற்று நடவு செய்ய நான் முதலில் தயங்கினேன். பின்னர் வேளாண்துறை அலுவலர்கள், தொழில் நுட்பங்கள், மகசூல் காரணிகள் குறித்து எனக்கு வழங்கிய ஆலோசனையின் பேரில் செம்மைநெல் சாகுபடி செய்தேன். இதுவரை வெள்ளை பொன்னியை சாதாரண முறையில் நடவு செய்து ஏக்கருக்கு 26 மூட்டையான 1,240 கிலோ மகசூல் பெற்றேன். இப்போது செம்மை நெல் சாகுபடியில் 45 மூட்டை அதாவது 2,800 கிலோ மகசூல் பெற்று இரட்டிப்பு மகசூலால் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்துள்ளேன்," என்றார்.வேளாண் அலுவலர் ஜனாத்தனன் நன்றி கூறினார்.

### கோகோ விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம்

கொட்டாம்பட்டி : கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் கோகோ சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுவதாக தோட்டக்கலை உதவி இயக்குனர் ஜெயக்கொடி தெரிவித்துள்ளார். அவர் கூறும்போது,""தென்னை மற்றும் பாக்குத் தோப்புகளில் கோகோவை ஊடுபயிராக பயிரிடலாம். இதன் விதைகள் சாக்லெட், ஊட்டச் சத்து பானங்கள், ஐஸ்கிரீம், பிஸ்கட், கேக் வகைகள் மற்றும் மருந்துப் பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுகிறது. தென்னையில் ஊடுபயிராக பயிரிடுவதால் இயற்கை உரம் கிடைப்பதுடன், களைகள் கட்டுப்படுத்தப்பட்டு, மண் அரிமானம் தடுக்கப்படுவதால் தென்னையிலும் மகசூல் அதிகரிக்கிறது.

கோகோ நாற்றுக்கள், காட்பரி நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்டு தோட்டக் கலைத் துறை மூலம் விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் வழங்கப் படுகிறது. இதனால் ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் கூடுதல் வருமானம் கிடைக்கும். வங்கி மூலம் நடவு செலவிற்குத் தேவையான கடன் வசதியும் தோட்டக் கலை அலுவலர்களால் செய்து தரப்படுகிறது. எனவே கோகோ பயிரிட விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை வளர்ச்சி மைய அலுவலர்களையோ, கொட்டாம்பட்டி தோட்டக் கலை உதவி இயக்குனரையோ அணுகலாம்," என்றார்.

### விவசாயிகளுக்கு வேளாண் பயிற்சி

சமயநல்லூர் : மதுரை மேற்கு வட்டாரத்தில் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ், மஞ்சம்பட்டி,பெரியபட்டி, பொதும்பு ஊர்மெச்சிகுளம் கிராமங்களில் தலா 30 விவசாயிகளை தேர்வு செய்து வயல்வெளிபள்ளி குறித்து 20 வாரங்கள் பயிற்சி அளிக்கப்பட்டது. வளமான பயிரை உருவாக்குதல்,நன்மை தரும்

பூச்சிகளின் இனப்பெருக்கத்தை அழியாமல் பாதுகாத்தல்,சுற்றுபுறசூழலை பேணுதல் போன்ற தொழில் நுட்பங்களை வேளாண் மை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர்கள் விவசாயிகளுக்கு விளக்கினர் என, மதுரை மேற்கு வேளாண்மை உதவி இயக்குனர் சுருளிபொம்மு தெரிவித்தார்.

### பெயரளவில் நடக்கும் விவசாய வகுப்புகள்

பரமக்குடி : பரமக்குடியில் விவசாய பயிற்சி வகுப்புகள் பெயரளவில் நடப்பதால் விவசாயிகளுக்கு அரசின் திட்டங்கள் சரியான முறையில் சென்றடையாமல் உள்ளது. பரமக்குடி வேளாண்மை பயிற்சி நிலையத்தில் ஐசோபாம்(பயறு) திட்டத்தின் கீழ் பயறு வகை பயிர்கள் சாகுபடி குறித்த தொழில் நுட்ப பயிற்சி வகுப்புகள் கமுதி, முதுகுளத்தூர், நயினார்கோவில், போகலூர், பரமக்குடி யைச் சார்ந்த விவசாயிகளுக்காக நடத்தப்பட்டன. இதில் வேளாண்மைத்துறை உயர் அதிகாரிகளும், வேளாண்மை பல்கலைக் கழக விஞ்ஞானிகளும் கலந்து கொண்டு பேசினர்.

தற்போது மாவட்டத்தில் பயறு வகைகள் சாகுபடி குறைந்து விட்டதால், வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்வதாக பயிற்சி அதிகாரி தெரிவித்தார். பயிற்சி வகுப்பில் ஐந்து ஒன்றியங்களிலிருந்து 50க்கும் குறைவான விவசாயிகள் மட்டுமே பங்கேற்றனர். இது போன்ற பயிற்சி வகுப்புகளில் விவசாயிகள் சிலர் மட்டுமே பங்கேற்பது வருத்தத்திற்குரியதாகும்.வேளாண்மை துறையினர் தங்கள் கடமையை உணர்ந்து அனைத்து விவசாயிகளும் பங்கேற்று பயன்பெறும் நோக்கில் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

### நுகர்பொருள் வாணிப கழகத்துக்கு விவசாயிகள் மத்தியில் வரவேற்பு

கும்பகோணம்: களத்து மேட்டுக்கே சென்று நுகர்பொருள் வாணிப கழகத்தினர் நேரடி நெல் கொள்முதல் செய்யும் முறை விவசாயிகள் மத்தியில் வரவேற்பு பெற்றுள்ளது.தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் குறுவை, சம்பா மற்றும் கோடை நெல் அறுவடையின்போது கொள்முதல் நிலையங்கள் மூலம் அரசு அறிவித்துள்ள விலையில் வாங்கி கொள்கிறது. இதற்கென நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் தேவைப்படும் இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்படுகிறது. ஒரே நேரத்தில் அறுவடை நடைபெறுவதால் விவசாயிகள் கொண்டு செல்லும் நெல்லுடன் பல நாட்கள் காத்திருந்து விற்க வேண்டிய அவல நிலை இருந்து வருகிறது.விவசாயிகளுக்கு பாதகமான இந்த சூழ்நிலையை தனியார் நெல் வியாபாரிகள் பயன்படுத்தி கொள் கின்றனர்.

அரசு நிர்ணயித்த விலையைவிட குறைவாக வாங்கி கொண்டு உடனடியாக பணம் கொடுத்து விடுகின்றனர். இதனால் தனியார் நெல் வியாபாரிகளின் செயல்பாட்டை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.இந்த

அவல நிலையை போக்கும் வகையில் எந்தவொரு நெல் அறுவடை பருவத்திலும் 300 மூட்டைக்கு மேல் விவசாயிகள் கொடுப்பதாக இருந்தால் அவர்களது களத்து மேட்டுக்கே சென்று நெல் கொள்முதல் செய்யப்படும் என்ற சிறப்பு திட்டத்தை அரசு அறிவித்தது. இத்திட்டம் விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.கும்பகோணம் அருகே ஏரகரம் பகுதியில் அறுவடை செய்யப்பட்ட சுமார் 2 ஆயிரத்து 700 மூட்டைகள் கொள்முதல் செய்ய தயாராக இருப்பதாக நுகர்பொருள் வாணிப கழகத்தில் விவசாயிகள் பதிவு செய்தனர். இதையடுத்து நுகர்பொருள் வாணிப கழக அலுவலர்கள் எடை மிஷின்கள், புதிய சாக்கு பைகளுடன் ஏரகரம் சென்று நெல்லை கொள்முதல் செய்து உடனுக்குடன் பணத்தை பட்டுவாடா செய்தனர். இதனால் விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பும், மகிழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது.இதுகுறித்து தஞ்சை மண்டல வாணிப கழக மேலாளர் பிச்சையா கூறுகையில், அரசு அறிவித்த புதிய நெல் கொள்முதல் சிறப்பு திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் 400 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. சம்பா அறுவடை முடியும்வரை தொடர்ந்து களத்திற்கே சென்று கொள்முதல் செய்யப்படும். அதற்குரிய தொகை உடனுக்குடன் பட்டுவாடா செய்யப்படும். 300 மூட்டைக்கு மேல் இருந்தால் இத்திட்டத்தின் மூலம் நேரடியாக செல்கிறோம். இந்த அளவை 200 மூட்டையாக குறைக்க வேண்டும் என விவசாயிகள் கேட்டு வருகின்றனர். இது தொடர்பாக அரசு வெளியிடும் அறிவிப்பிற்கு ஏற்ப மாற்றம் செய்யப்படும் என்றார்.

### பூமி வெப்பமயமாவது குறித்து விழிப்புணர்வு கூட்டம்

வல்லநாடு:தெய்வச்செயல்புரம் அவார்டு தொண்டு நிறுவனத்தில் புவி வெப்பமயம் குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடந்தது.அவார்டு நிறுவன புவிச்சூழல் பாதுகாப்பு திட்ட ஒருங்கிணைப்பாளர் உலகராஜா வரவேற்றார். தமிழ்நாடு வனவிரிவாக்கத்துறை சாத்தான்குளம் தொகுதி வன அலுவலர் மார்கண்ட்கிருஷ்ணன் தலைமை வகித்தார்.

தூத்துக்குடி மாவட்ட சின்பெரு அமைப்பின் அமைப்பாளரும், அவார்டு நிறுவன இயக்குனருமான தாணுலிங்கம் கடந்த 20 ஆண்டுகளில் உலகப் பொருளாதார அந்நிய முதலீட்டு வளர்ச்சியாலும், உள்நாட்டு கிராம மக்களின் அடிப்படை வாழ்வாதாரங்களை கருத்தில் கொள்ளாத அரசுகளின் செயல்களாலும் ஏழை நாடுகள் உலக வெப்பத்தால் மிகவும் பாதிப்படைகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது குறித்து பேசினார்.

நிகழ்ச்சியில் ஸ்ரீவைகுண்டம் கருங்குளம், தூத்துக்குடி ஆகிய யூனியன் பகுதிகளை சேர்ந்த பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளும், மாவட்ட சின்பெரு தொண்டு நிறுவன பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.மாலை உதயம் பெண்கள் கூட்டமைப்பின் பொறுப்பாளர் துளசிமணி நன்றி கூறினார்.

### மண்புழு உர அலகு அமைக்க மாவட்ட விவசாயிகளுக்கு ரூ. 1. 95 கோடி மானியம்

திருச்சி : திருச்சி மாவட்ட விவசாயிகளுக்கு மண்புழு உர அலகு அமைத்திட ரூ. ஒரு கோடியே 95 லட்சம் மானிய தொகையை வேளாண் துறை அமைச்சர் வழங்கினார்.திருச்சி மாவட்டத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மண்புழு உர அலகு அமைத்திட மானியம் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. கலெக்டர் சவுண்டையா தலைமை வகித்தார். போக்குவரத்து துறை அமைச்சர் நேரு முன்னிலை வகித்தார்.

வேளாண்துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மருங்காபுரி ஒன்றியம் கொடும்பப்பட்டியை சேர்ந்த மாணிக்கம், சீலநாயக்கன்பட்டியை சேர்ந்த தங்கவேலு, எண்டபுளியைச் சேர்ந்த ரவிச்சந்திரன், அந்தநல்லூர் ஒன்றியத்தை சேர்ந்த கவுதமன், ஸ்ரீரங்கம் மேலூரை சேர்ந்த சண்முகம், துறையூர் ஒன்றியம் பொன்னு சங்கம்பட்டியை சேர்ந்த தனபால் ஆகிய ஆறு பேருக்கு தலா ரூ. 32 ஆயிரத்து 500 வீதம் மொத்தம் ஒரு கோடியே 95 லட்சம் ரூபாயை மண் புழு உர அலகு அமைத்திட மானியமாக வழங்கினார்.நிகழ்ச்சியில் வேளாண் இணை இயக்குநர் பொன்னுச்சாமி, துணை இயக்குநர் ராம்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### மூலிகை மருந்துகள் பொதுமக்களிடையேவிழிப்புணர்வு அதிகரிக்க வலியுறுத்தல்

திருநெல்வேலி:மூலிகை மருந்துகள் குறித்த விழிப்புணர்வு பொதுமக்களிடையே அதிகரிக்கவேண்டும் என நெல்லையில் நடந்த கதர் கிராமத் தொழில் வாரிய மூலிகை பொருட்கள் விழிப்புணர்வு முகாமில் கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன.கதர் மற்றும் கிராம தொழில்கள் ஆணையத்தின் மதுரை கோட்ட அலுவலகம் மூலமாக மூலிகைப் பொருட்கள் சம்பந்தமான விழிப்புணர்வு முகாம் நெல்லையில் நடந்தது. முகாமை நபார்டு பாங்க் உதவிப் பொதுமேலாளர் சுரேஷ் துவக்கிவைத்து பேசுகையில், "தமிழகத்தில் மூலிகை ஆராய்ச்சி, ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தொழில் துறையில் புரட்சி ஏற்பட்டது போல் 15 முதல் 20 ஆண்டுகளில் உடல் ஆரோக்கிய விழிப்புணர்வு மிகப்பெரிய புரட்சியாக மாறும். அதற்கு இதுபோன்ற கருத்தரங்குகள் அடிக்கடி நடத்தப்படவேண்டும். மூலிகைகளை பாதுகாக்கவேண்டும். மூலிகைகளை பயன்படுத்தவேண்டும். உடலுக்கு தேவையான மூலிகை மருந்துகளை தயாரித்து அதை விஞ்ஞான ரீதியில் விற்பனைக்கு அனுப்பும் போது அதன் வளர்ச்சி அபரிமிதமாக இருக்கும். சந்தையில் என்ன மூலிகை மருந்துகளுக்கு அதிக தேவை இருக்கிறது என்பதை பார்த்து அதற்கு தகுந்தாற்போல் உற்பத்தி செய்யவேண்டும். மூலிகை மருந்துகள் குறித்த விழிப்புணர்ச்சி அதிகரிக்கவேண்டும். மூலிகை பயிர் சாகுபடிக்கு பாங்குகளும் கடன் வழங்கி உதவவேண்டும் என்றார்'.

மதுரை கதர் கிராமத் தொழில்கள் வாரிய நோடல் அதிகாரி ஆர்.பி.அசோகன் பேசுகையில், "மூலிகை மருந்து பொருட்கள் செய்வதற்கு பிரதமரின் வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலம் தேவையான மானியத்துடன் நிதியுதவியை கதர் ஆணையம் அளித்து வருகிறது. இந்த திட்டத்தில் ரூ.25 லட்சம் வரை பாங்குகள் கடனுதவி வழங்குகிறது. இதில் அதிகபட்சமாக ரூ.8.75 லட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது. கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தில் மட்டும் ரூ.40 கோடிக்கு கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.55 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 8500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை பொதுமக்கள் பயன்படுத்தி பயடையவேண்டும் என்றார்'.முன்னோடி வங்கி மேலாளர் ஜான் பெலிக்ஸ் பர்ணான்டோ பேசுகையில், "விவசாய கல்லூரி மாணவர்கள், தோட்டக் கலை பயிலும் மாணவர்களிடையே இதுபோன்ற கருத்தரங்குகள் நடத்தப்படவேண்டும். 61ம் ஆண்டு நாட்டில் 80 சதவீதம் விவசாயம் இருந்தது. 91ம் ஆண்டில் 66 சதவீதமாக குறைந்தது. 2001ம் ஆண்டில் 60 சதவீதமாக விவசாயம் குறைந்துள்ளது. 2011ம் ஆண்டில் கணக்கெடுப்பு நடத்தப்படும் போது தான் விவசாயம் எந்த அளவிற்கு உள்ளது என்பது தெரியவரும். நாளுக்கு நாள் விவசாயம் சார்ந்தவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இதற்கு பண்ணை சாராத தொழில்களை ஊக்கப்படுத்தவேண்டும். மாற்றுத் தொழில்களை உருவாக்கவேண்டும். மூலிகை மருத்துவத்தில் 5 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு பணப்புழக்கம் உள்ளது. மூலிகைத் தொழில் நல்ல லாபம் தரும் தொழில். மூலிகைகளின் தேவை அதிகம் உள்ளது. ஆனால் உற்பத்தி குறைவாகவே உள்ளது.

இந்தியாவில் 45 ஆயிரம் மூலிகைகள் உள்ளன. மூலிகை சேகரிப்பு தொழில் பற்றி விழிப்புணர்ச்சி அதிகரிக்கவேண்டும் என்றார்'.தோட்டக் கலைத்துறை உதவி இயக்குனர் ராஜசிங் பேசுகையில், "மூங்கில் சாகுபடி, சென்னா, கண்வலி கிழங்கு போன்றவற்றிர்க்கு சந்தையில் நல்ல வரவேற்பு இருப்பதையும், அதன் தொழில் நுட்பங்களையும் விளக்கினார்.

டாக்டர் ராமசாமி பேசுகையில், "மலைப்பகுதிகளில் வசிக்கும் ஆதிவாசிகள் மூலிகைகளை தான் பயன்படுத்துகின்றனர். அவர்களுக்கு எந்த வித நோய்களும் தாக்குவதில்லை. காய்ச்சல், பிரசவம் போன்வற்றிர்க்கு அவர்கள் ஆஸ்பத்திரிக்கு செல்வதில்லை. நாம் உட்கொள்ளும் உணவுகளில் ராசாயனம் கலந்துள்ளதால் அது விஷமாகிவிடுகிறது. இயற்கை விவசாயம், மூலிகைகள் குறித்த விழிப்புணர்வு அதிகரிக்கவேண்டும் என்றார்'.கதர் கிராமத் தொழில் வாரிய அதிகாரி செல்வராஜ் வரவேற்றார். நோடல் அதிகாரி வாசிராஜன், டாக்டர்கள் பாலசுப்பிரமணியன், செல்லத்துரை, கதர் கிராமத் தொழில் வாரிய மேற்பார்வையாளர்கள் முருகராஜ், கண்ணன், ஜெயபால், பிருதிவிராஜ், மோகன்ராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**கடையநல்லூர் கூட்டுறவு பாங்கில் வாடிக்கையாளர் தினம்**

திருநெல்வேலி:நெல்லை மாவட்ட மத்திய கூட்டுறவு பாங்கின் கடையநல்லூர் கிளையில் கடன் வழங்கும் விழா மற்றும் வாடிக்கையாளர் சந்திப்பு முகாம் நடந்தது. வாடிக்கையாளர் தின விழாவிற்கு மத்திய கூட்டுறவு பாங்கின் உதவி பொது மேலாளர் பள்ளிகொண்டான் தலைமை வகித்து, டிபாசிட் செய்தவர்களுக்கு ரசீதுகளையும், மகளிர் சுயஉதவி குழுவினருக்கு கடன்களையும் வழங்கி பேசினார். நெல்லை மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் ஸ்டான்லி முன்னிலை வகித்தார்.விழாவில் கூட்டுறவு பொறுப்பு 2 குழுவுக்கு ரூ.5 ஆயிரமும், மகளிர் சிறுவணிக கடன் 5 குழுவுக்கு ரூ.25 ஆயிரமும், பெட்டிகடை கடன் 6 பேருக்கு ரூ.30 ஆயிரமும் மற்றும் கடையநல்லூர் கூட்டுறவு பண்டகசாலை, கடையநல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், கிரசண்ட் கூட்டுறவு பண்டகசாலை, ஊர்மேலழகியான் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், முத்துகிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், கடையநல்லூர் பஞ்.,யூனியன் ஆசிரியர் கூட்டுறவு சிக்கன நாணய சங்கம் பணியாளர்களுக்கு ரூ.1 கோடி வரை கடன் வழங்கப்பட்டது.முன்னதாக வங்கியின் கள மேலாளர் முகைதீன்பிச்சை வரவேற்புரை நிகழ்த்தினார். ஓய்வுபெற்ற வட்டார வளர்ச்சி அலுவலர் தங்கவேல், ஓய்வு பெற்ற தமிழாசிரியர் இசக்கி மற்றும் கூட்டுறவு கடன் சங்க பணியாளர்கள் கலந்து கொண்டனர். வங்கியின் மேலாளர் பழனியப்பன் நன்றி கூறினார்.

**நிலக்கடலை விதைஉற்பத்தி பயிற்சி**

திருநெல்வேலி:கீழப்பாவூர் வட்டாரம் ஆவுடையானூர் கிராமத்தில் நிலக்கடலை விதை உற்பத்தி இரண்டாம் கட்ட பயிற்சி நடந்தது.ஆவுடையானூர் கிராமத்தில் விதை கிராம திட்டத்தின் கீழ் விதை உற்பத்தி பற்றிய பயிற்சி 3ம் கட்டமாக நடந்து வருகிறது. இரண்டாம் கட்ட பயிற்சியில் பாவூர்சத்திரம் வேளாண்மை உதவி இயக்குநர் செந்தில்வேல்முருகன் நிலக்கடலை விதை உற்பத்தி செய்வதன் அவசியம் பற்றி கூறினார்.விதை சான்று அலுவலர் சிவகுருநாதன் நிலக்கடலை ரகங்களின் குணாதிசயங்கள் பற்றியும், நிலக்கடலை விதை உற்பத்தி பற்றியும் கூறினார். நிலக்கடலையில் ஜிப்சம் இடுவதன் அவசியம் பற்றி வேளாண்மை அலுவலர் கனகம்மாள் கூறினார்.பயிற்சியில் ஆவுடையானூர் கிராமத்தை சேர்ந்த 50 விவசாயிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை உதவி விதை அலுவலர் ராமசந்திரன், உதவி வேளாண்மை அலுவலர் ஜெயா செய்திருந்தனர்.

**நெல்லை மாவட்டத்தில் 6 இடங்களில்நேரடி நெல் கொள்முதல் நிலைய வசதி**

திருநெல்வேலி:நெல்லை மாவட்டத்தில் 6 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது.நெல்லை மாவட்டத்தில் தற்போது நெல் அறுவடை நல்ல முறையில் நடந்து வருகிறது. விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்முதல் செய்ய இதுவரை 6 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்

திறக்கப்பட்டுள்ளன. அம்பை, சேரன்மகாதேவி, களக்காடு, வடக்கு அரியநாயகிபுரம், முன்னீர்பள்ளம், சிவகிரி ஆகிய இடங்களில் திறக்கப்பட்டுள்ளது. கீழநத்தம் மற்றும் திருக்குறுங்குடி ஆகிய இடங்களில் கொள்முதல் நிலையங்கள் திறக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் செயல்பட்டு வரும் 9 குடோன்களிலும் நேரடி நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. 17 சதவீதம் ஈரப்பதம் இருந்தால் குவிண்டாலுக்கு 1,100 ரூபாய், சாதா ரகத்திற்கு 17 சதவீதம் ஈரப்பதம் உள்ள நெல்லை 1,050 ரூபாய் என்ற விலையிலும் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.நெல் கொள்முதல் செய்ய போதிய பணம் மற்றும் சாக்கு ஆகியவை கையிருப்பில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 14 ஆயிரத்து 500 மெ.டன் மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.எனவே, நெல் கொள்முதல் நிலையங்களை பயன்படுத்தி அதிக அளவில் நெல்லை விற்பனை செய்து பயன் அடைய வேண்டும். தேவைக்கேற்ப கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என்று கலெக்டர் ஜெயராமன் தெரிவித்தார்.

**நெற்பயிரில் மகசூல் இழப்பைத் தரும் கதிர்நாவாய்ப் பூச்சியைக்கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி ஆலோசனை**

திருநெல்வேலி:நெற்பயிரின் முக்கிய எதிரியான கதிர்நாவாய்ப் பூச்சியை உரிய நேரத்தில் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மகசூல் இழப்பினை தவிர்த்திடலாம் என வேளாண் அதிகாரி ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதுகுறித்து திருநெல்வேலி வேளாண்மை இணை இயக்குனர் தேவசகாயம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:நெல்லை மாவட்டத்தில் பிசானப் பருவ நடவு செய்யப்பட்டுள்ள நெற்பயிரில் கதிர் நாவாய்ப் பூச்சித் தாக்குதல் வர வாய்ப்புள்ளது. இப்பூச்சி நெல்மணிகளில் பால் பிடிக்கும் தருணத்தில் அதிக தாக்குதல் ஏற்படுத்தும்போது மகசூல் இழப்பு அதிகம் ஏற்படும். எனவே நெல் பயிரில் கதிர் நாவாய்ப் பூச்சியைக் கட்டுப்படுத்துவது மிகவும் அவசியமாகும். கதிர் நாவாய்ப் பூச்சி இளம் பச்சை கலந்த பழுப்பு நிறத்தில் காணப்படும். இளம் பூச்சிகள் வெண்மை கலந்த பச்சை நிறத்தில் காணப்படும். தாய்ப்பூச்சி 200 முதல் 300 முட்டைகள் வரை இடும். நெல் தோகை நடு நரம்பு மேலே வரிசையாக இடுகின்றன. முட்டைகள் வெள்ளை நிறத்தில் நீண்ட வட்ட வடிவத்தில் இருக்கும். முட்டையிலிருந்து வெளிவரும் குஞ்சுகள் பச்சை நிறத்திலும் பின் வளர வளர பழுப்பு நிறத்திலும் மாறும். 3 முதல் 4 மாதங்கள் வரை உயிர் வாழும்.நெல் பயிரில் மணிகளில் பால் பிடிக்கும் சமயம் இப்பூச்சியானது பாலை உறிஞ்சி சாப்பிடும். இதனால் மணிகள் பதராகி விடும். வாயிலிருந்த சுரக்கும் ஒரு வகை திரவத்தினால் மணிகளில் பழுப்பு நிறப் புள்ளிகள் உண்டாகின்றன.

கதிர்களில் பச்சை நிறமுடைய இளம் பூச்சிகளும், வளர்ச்சியடைந்த பூச்சிகளும் இருப்பதைக் காணலாம். இப்பூச்சிகள் இருக்கும் வயல்களில் இருந்து ஒரு வகை துர்நாற்றம் வீசும்.நெற்பயிரில் பூக்கும் தருணத்தில் 100 கதிர்களுக்கு 5 பூச்சிகள் தாக்குதலும், பால் பிடிக்கும் தருணத்தில் 15 பூச்சிகள் தாக்குதலும் காணப்பட்டால் பொருளாதா சேத நிலையைத் தாண்டி விட்டதாக எடுத்துக் கொள்ளலாம். ஓர் ஏக்கருக்கு அசாடிராக்டின் எனப்படும் வேம்பு சார்ந்த மருந்தினை 200 மில்லியுடன் 100 மில்லி ஒட்டும் திரவமான பைட்டோவிட் அல்லது பாலை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்திடலாம். அதிகமான தாக்குதல் ஏற்படும்போது ஏக்கருக்கு மோனோகுரோட்டோபாஸ் 200 மில்லி அல்லது மாலத்தியான் 200 மில்லி தெளித்தும் கட்டுப்படுத்தலாம். எனவே நெற்பயிரின் முக்கிய எதிரியான கதிர்நாவாய்ப் பூச்சியை உரிய நேரத்தில் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மகசூல் இழப்பினை தவிர்த்திடலாம்.இவ்வாறு அவர் அச்செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

### கரும்பில் நாற்றங்கால் நடவு முறை அழகுசேனையில் செயல் விளக்கம்

கண்ணமங்கலம்:கண்ணமங்கலம் கரும்பு கோட்டம் சார்பில், கரும்பில் நாற்றங்கால் நடவு முறை குறித்த செயல்விளக்க கூட்டம் நடந்தது.அழகுசேனையில் உள்ள அசோக்குமார் என்பவரது விவசாய பண்ணையில் நடந்த இக்கூட்டத்துக்கு, வண்ணாங்குளம் பஞ்., தலைவர் ரமேஷ் தலைமை வகித்தார். தரணி சர்க்கரை ஆலை முதுநிலை மேலாளர் ராஜி வரவேற்றார்.

இதில், மார்க்கெட்டிங் மேனேஜர் ஜெயராஜ் பேசியதாவது:பழைய முறையில் ஏக்கருக்கு 4 டன் கரும்பு கரணை நடவு செய்தால், ஏக்கருக்கு 30 முதல் 40 டன் வரை மகசூல் கிடைக்கும். புதிய தொழில் நுட்பத்தின்படி 60 ஆயிரம் பருக்களை வெட்டியெடுத்து, பிளாஸ்டிக் குழிகள் 50 அடங்கிய "டிரே'யில் தென்னை நார் கழிவை நிரப்பி, பரு மேலே இருக்கும் படி 30 நாள் வைத்தால் கரும்பு முளைப்பு வரும்.

இதனை பிளாஸ்டிக் கவரில் மண் நிரப்பி வைத்து, நாற்றங்கால் பயிராக வைத்து, பின்னர் 5 அடி அகல பாரின் இருபுறமும் அரை அடி இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். சொட்டு நீர் பாசனம் மூலம் பயிரிட்டால் ஏக்கருக்கு 60 முதல் 70 டன் வரை மகசூல் கிடைக்கும்.

ஏக்கருக்கு 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் செடிகளை நடலாம். நாற்றங்கால் பயிரிட முடியாத விவசாயிகள், நாற்று ஒரு ரூபாய் வீதம் விலைக்கு வாங்கி நடலாம். விதை கரும்பு 4 டன்னுக்கு பதில் புதிய தொழில்நுட்பத்தில் 3/4 டன் கரும்பே போதுமானது. பரு வெட்டிய கரும்பையும் சர்க்கரை ஆலைக்கு அனுப்பி விடலாம். இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில், ராஜி பேசியதாவது:

கரும்பு தோட்டத்தில் ஊடு பயிராக வெண்டை, உளுந்து, பாசிப்பயறு, மக்காச்சோளம் பயிரிடலாம். உரம், விதை கரும்பு ஆகியன 10 ஆயிரம் ரூபாய் மதிப்பில் வங்கி வட்டியை விட ஒரு சதவீதம் குறைவாக, அதாவது 6 சதவீத வட்டியில் மார்ச் 31க்குள் விவசாயிகளுக்கு வழங்கப்படும். செலவு செய்து கிணறு வெட்டுவதைவிட, இருக்கும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துவது நல்லது.இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில், இப்கோ கம்பெனி முதுநிலை மேலாளர் வரூர், போளூர் தரணி சர்க்கரை ஆலை துணை மேலாளர் ஸ்ரீதரன், கரும்பு அலுவலர் வரதராஜன், உதவி கரும்பு அலுவலர்கள் முத்துசாமி, நிஜலிங்கப்பா, கரும்பு உதவியாளர்கள் கலந்து கொண்டனர். மேலும் களம்பூர், கேளூர், கண்ணமங்கலம் கரும்பு கோட்ட விவசாயிகள் 50 பேரும் பங்கேற்றனர்.

### மரக்கன்று நடும் விழா

வேலூர்:மேல்விஷாரம் பொறியியல் கல்லூரியில் மரக்கன்று நடும் விழா நடந்தது. கல்லூரி என்எஸ்எஸ்., மற்றும் ரெட்கிராஸ் சங்கம் சார்பாக நடந்த மரக்கன்று நடும் விழாவிற்கு, முதல்வர் குமார் தலைமை வகித்தார். கல்லூரி வளாகத்தில் 100 மரக்கன்றுகள் நடப்பட்டது. ஏற்பாடுகளை, என்எஸ்எஸ்., திட்ட அலுவலர் புஷ்பராஜ், செஞ்சிலுவை சங்க அலுவலர் செந்தில் குமார் செய்திருந்தனர்.

### இலவச கால்நடைமருத்துவ முகாம்

சேத்தூர்:சேத்தூர் அரசு கால்நடை மருந்தகம் சார்பில் இலவச கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம், முகவூரில் நடந்தது. முகவூர் ஊராட்சி தலைவர் கடுங்கோன் பாண்டியன் துவக்கி வைத்தார்.
சேத்தூர் கால்நடை மருந்தக டாக்டர் ரவிச்சந்திரன் தலைமையில் மருத்துவ குழுவினர், 161 மாடுகளுக்கு சிகிச்சை அளித்தனர். சிறந்த மாடு வளர்ப்போருக்கு ஊராட்சி தலைவர் பரிசு வழங்கினார். மருந்தக மற்றும் ஊராட்சி ஊழியர்கள் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

### பண்ணைக்கருவி பயன்படுத்தினால் பட்டுப்புழு வளர்ப்பில் கூடுதல் லாபம்

உடுமலை : "பண்ணைக்கருவிகளை பயன் படுத்துவதால் பட்டுப்புழு வளர்ப்பில் கூடுதல் லாபம் பெறலாம்', என விழிப்புணர்வு கூட்டத்தில் தரிவிக்கப்பட்டது. உடுமலை அருகேயுள்ள போடிபட்டியில் பட்டு வளர்ச்சி துறை சார்பில் தொகுப்பு வளர்ச்சி ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குநர் பன்னீர்செல்வம் தலைமை வகித்தார். விவசாயி ராஜூ வரவேற்றார். பட்டு வளர்ப்பில் நவீன இயந்திரங்கள் குறித்து விஞ்ஞானி செல்வராஜ் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார். கூட்டத்தில், விவசாயம் சார்ந்த தொழில்கள் தொழிலாளர் தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளது. பட்டு வளர்ப்பு தொழில் தொழிலாளர் தட்டுப்பாட்டல் பாதிக்கப்படாமல் இருக்கவும், செலவை பல மடங்கு குறைக்கவும் தேவையான கருவிகள் கண்டுபிடித்து விவசாயிகள் பயன் பாட்டிற்கு

அளிக்கப்பட்டுள்ளது. மினி பவர் டில்லர், பேட்டரி ஸ்பிரேயர், புருனீங் மெஷின், கூடு அறுவடை இயந்திரம் பட்டுப்புழு வளர்ப்பில் விவசாயிகளுக்கு மிகுந்த உதவியாக இருக்கிறது. களை வெட்ட சிறிய பவர் டில்லர் இயந்திரந்தை மல்பெரி தோட்டத்தில் பயன்படுத்துவதன் மூலம் ஏக்கருக்கு 700 ரூபாய் வரை செலவு குறையும். செடி இடைவெளியில் இயந்திரம் செல்வதால் சிறிய உழவு செய்ததற்கான பலன்கள் கிடைக்கும். மல்பெரி செடிகளிலிருந்து இலைகளை அறுவடை செய்ய தண்டு அறுவடை இயந்திரம் (புரூனிங்) பயன் பாட்டில் உள்ளது. ஏக்கருக்கு 800 ரூபாய் வரை செலவு குறையும். மருந்து தெளிக்க பேட்டரி ஸ்பிரேயர், சுழல் சந்திரிகைகளில் கூடு அறுவடை இயந்திரம் போன்ற கருவிகளை பயன்படுத்தலாம்.

ஒரு சில இயந்திரங்களை வாங்க பட்டு வளர்ச்சி துறை மானியம் வழங்குகிறது. புழு வளர்ப்பு மனைகளில் புழுக் களுக்கு இலை போட டிராலி, கழிவுப்பஞ்சு நீக்கும் இயந்திரம், புழுக்களுக்கு மருந்து தெளிக்க பேட்டரி டஸ் டர் வேலைப்பளுவை குறைக்கிறது. இயந்திரங்களை பயன்படுத்துவதால், தொழிலாளர் தேவை குறைந்து ஒரு "பேட்ச்' புழு வளர்ப்பில் 2 ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவை குறைக்கலாம். இதனால், தொழிலில் லாபம் அதிகரிக்கும். குறித்த நேரத் தில் பணிகளை முடிக்க முடியும் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அனைத்து கருவிகளும் மல்பெரி தோட்டத்தில் செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. உதவி ஆய்வாளர் சண்முகசுந்தரம், இளநிலை ஆய்வாளர் முனீஸ்வரன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## 'மண் ஆய்வு செய்து மல்பெரி பயிரிடலாம் : பட்டுப்புழு வளர்ப்பில் லாபம் கிடைக்கும்'

உடுமலை : "மண் ஆய்வு செய்து மல்பெரி ரகங்களை பயி ரிடுவதால், பட்டுப்புழு வளர்ப்பில் நல்ல லாபம் பெறலாம்' என, செயல் விளக்க கருத்தரங்கில் விவசாயிகளுக்கு ஆலோ சனை வழங்கப்பட்டது.உடுமலை அருகே உள்ள பொட்டிநாயக்கனூர் கிரா மத்தில் "ஆத்மா' திட்டத் தின் கீழ் பட்டு வளர்ப்பு செயல்விளக்கம் மற்றும் கருத்தரங்கம் நடந்தது. பட்டு விவசாயி வேலாயுத சாமி முன்னிலை வகித் தார். பட்டு வளர்ச்சித்துறை உதவி ஆய்வாளர் குலாம் முக மது வரவேற்றார். பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குனர் பன்னீர் செல்வம் பேசியதாவது: உடுமலை பகுதி விவ சாயிகள் வெண்பட்டு வளர்ப் பில் முன்னோடி யாக உள் ளனர். மல்பெரி செடிகளை தாக்கும் மாவுப் பூச்சிகளை கட்டுப்படுத்த விவசாயிகள் ஒருங்கிணைந்து நோய் தடுப்பு பணிகளை மேற் கொள்ள வேண்டும். பட்டுக்கூடுகளை மாநில அரசின் கொள்முதல் மையங்களில் விற்பனை செய்ய விவசாயிகள் முன் வர வேண்டும், என்றார். மத்திய பட்டுவாரிய ஆராய்ச்சி மற்றும் விரி வாக்க நிலைய விஞ்ஞானி செல்வராஜ் பேசிய தாவது:

பட்டுப்புழு வளர்ப்பில் தேவையான உற்பத்தி பெற, மல்பெரி செடி வளர்ப்பில் கூடுதல் கவ னம் செலுத்த வண்டும். செடிகளை பயிரிடும் முன் மண் பரிசோதனையை கட் டாயம் செய்ய வேண்டும். பரிசோதனை முடிவு கள் அடிப்படையில் பரிந் துரைக்கப்படும் உரங்களை பயன் படுத்துவதால், சாகு படி செலவு குறைக்கப்படு வதுடன்,

தேவையான உற் பத்தியும் பெற முடியும். தண்ணீர் தட்டுப்பாட்டை தவிர்க்க, சொட்டு நீர் பாசனத்தை பயன்படுத்துவ தால், விரயம் குறைந்து, வயலில் தேவையற்ற களைகள் முளைக்காது.கோடையில் முறை யாக சாகுபடி தொழில் நுட்பங்களை பயன் படுத் தினால், கூடுதலாக மல்பெரி இலைகளை அறுவடை செய்யலாம். உடுமலை பகுதி விவ சாயிகள் தொழில்நுட் பங்களை முறையாக பின் பற்றுவதால், ஆண்டு முழுவதும் வெண்பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்ய முடிகிறது. பரி சோதனை முறையில் முதல்கட்டமாக ஆண்டு முழுவதும் மூன்று விவ சாயிகள் வெண்பட்டுக் கூடுகளை வளர்த்தனர். கடந்த சில ஆண்டு களில் உற்பத்தியில் ஈடு படும் விவசாயிகளின் எண்ணிக்கை பல ஆயிர மாக உயர்ந்துள்ளது. மண் பரிசோதனை, மல்பெரி செடி, புழு வளர்ப்பு மனைகளை முறையாக பராமரித்தால் அனைத்து சீசன்களிலும் நல்ல உற்பத்தி பெற முடியும், என்றார். பப்பாளி மாவுப்பூச்சி தடுப்பு முறைகள் குறித்து உதவி ஆய்வாளர் சண் முகசுந்தரம் பேசினார்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

*கரும்பு விவசாயிகள் அறிக்கை அரசியல் உள்நோக்கம் கொண்டது கருணாநிதி அறிக்கை*

*சென்னை, பிப்.19–*

*"கரும்பு விவசாயிகள் அறிக்கை அரசியல் உள்நோக்கம் கொண்டது" என்று முதல்–அமைச்சர் கருணாநிதி கூறியுள்ளார்.*

*இதுதொடர்பாக முதல்–அமைச்சர் கருணாநிதி வெளியிட்டுள்ள கடிதம் வடிவிலான அறிக்கையில் கூறியிருப்பதாவது:–*

*கரும்பு விலை*

*கரும்பு விலை பிரச்சினையில் ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் ஏதோ பள்ளிக் கூடத்துச் சின்னப் பிள்ளைகளைப் போல சண்டை போடுவதாக கற்பனை செய்து கொண்டு; தாங்கள் என்னவோ இதிலெல்லாம் தலையிடாத வகுப்பறை சட்டாம்பிள்ளைகளைப் போலக் கருதிக் கொண்டு; "அரசியல் கட்சிகளின் கருத்து வேறுபாடுகளைக் கரும்பு உற்பத்தியாளர்களிடம் திணிப்பதா?" என்ற ஒரு கேள்வியைக் கேட்டு நீண்டதோர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.*

*தி.மு.க.வை காரணம் இல்லாமல் எதிர்த்துக் கொண்டிருக்கிற சில பத்திரிகைகள் அந்த அறிக்கையை பெரிய எழுத்துக்களிலே உற்சாகத்தோடு வெளியிட்டிருக்கிறார்கள்.*

*ஆலை அதிபர்கள்*

*அந்த அறிக்கையில் தமிழகத்தில் முன்னாள் ஆட்சியில் அரசு ஆதரவு விலை அளிக்காமல் இருந்தது தவறு என்று சுட்டிக்காட்டுவதோடு – உத்தரப் பிரதேசத்திலும், மராட்டியம், கர்நாடகம், ஆந்திரா போன்ற மாநிலங்களிலும் 2,100 ரூபாய் முதல் 2,300 ரூபாய் வரை விலை கொடுக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.*

*விலையைச் சொல்லியிருக்கிறார்களே தவிர, அங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற கரும்பின் "பிழி திறன்" என்ன*

என்பதைப் பற்றி அவர்கள் யாரும் விவரிக்கவில்லை. முதலில் ஒரு விவரத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். கரும்புக்கு விலை அதிகம் கொடுக்க வேண்டுமென்று கேட்கின்ற விவசாயிகள் யாரிடம் கேட்கிறார்கள்? அரசாங்கத்திடம் கேட்கிறார்களா? அல்லது கரும்பை வாங்கி அரவை செய்து சர்க்கரையாக விற்பனை செய்கின்ற ஆலை அதிபர்களிடம் கேட்கிறார்களா? என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

மக்கள் மத்தியில் சர்ச்சை

கரும்பு விவசாயிகள் கேட்கிற விலையை அறிவித்துவிட அரசு தயாரானால்கூட, அந்த விலை கொடுக்க தங்களுக்கு கட்டுப்படி ஆகவில்லை என்று திட்டவட்டமாக கூறுகின்ற சர்க்கரை ஆலைகளின் கூக்குரலுக்கு அரசு என்ன பதில் சொல்ல வேண்டும்? என்ன பதில் சொன்னால் அந்தக் கூக்குரல் அடங்கும் என்பதையோ அல்லது கரும்பு விலை அறிவிப்பு என்பது – அந்த விலையை அரசே கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்கப் போகிற விலை என்று பொருள் அல்ல; அப்படி கூட்டுறவு ஆலைகளுக்காக அரசே கொடுக்க முன் வந்தால் கூட; அதேபோன்ற விலையை தனியார் ஆலை அதிபர்கள் தங்களுக்குக் கட்டுப்படி ஆகாது என்று கூறினால் அதனால் பாதிக்கப்படப் போவதும் கரும்பு விவசாயிகள்தானே?.

கரும்புக்கு நிர்ணயிக்கப்படுகிற விலை யாரால் யாருக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்பதை மறந்து விட்டோ அல்லது மறைத்து விட்டோ மக்கள் மத்தியில் ஒரு சர்ச்சையை உருவாக்குவது கரும்பு விவசாயிகளுக்கு நல்லது அல்ல. சர்க்கரை உற்பத்தி செய்யும் ஆலைகளுக்கும் நல்லது அல்ல.

கற்பனை கதை

உத்தர பிரதேசம், மராட்டியம், கர்நாடகம், ஆந்திரா போன்ற மாநிலங்களில் 2,100 ரூபாய் முதல் 2,300 ரூபாய் வரை தருகிறார்கள் என்றால் எத்தகைய பிழி திறன் கொண்ட கரும்புக்கு என்பதைக் கூறியிருக்க வேண்டாமா?. "அரசு நிதியில் இருந்து இலவச டி.வி., ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, அரசு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு, 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டம் போன்றவைகளுக்கு வாரி வழங்கும் இந்த அரசு, லாபத்தில் இயங்கும் சர்க்கரை ஆலைகளை விலையை உயர்த்திக் கொடுக்க ஆணையிடாதது விவசாயிகள் தற்கொலைக்கு வித்திட்டது" என்று ஒரு கற்பனைக் கதையையும் இந்த அறிக்கையிலே அவர்கள் இணைத்திருக்கிறார்கள்.

அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற மேற்கண்ட திட்டங்கள் அனைத்தும் மக்கள் நலத்திட்டங்கள்தான் என்பதை அனைவரும் அறிவர். இவைகளை எல்லாம் கிண்டல் செய்கின்ற இந்த அறிக்கையாளர்கள் விவசாயிகளுக்கான 7 ஆயிரம் கோடி ரூபாய்க்கான கூட்டுறவு கடன்களை ரத்து செய்து அரசு அறிவித்து நடைமுறைப்படுத்தியதை மட்டும் தங்களுக்கு வசதியாக மறந்தது ஏனோ?.

தற்போது விவசாயிகளுக்கு அறவே வட்டியில்லாத கூட்டுறவுப் பயிர்கள் கடன் கொடுப்பதையும் நினைவிலே கொள்ளாதது ஆச்சரியம்தான்.

மறந்தது ஏனோ?

சர்க்கரைத் தொழிலில் உற்பத்தி சில ஆண்டுகளிலே அதிகமாக இருக்கும், சில ஆண்டுகளிலே குறைவாக இருக்கும். அது மாறி மாறி வருகின்ற ஒன்று. சர்க்கரை உற்பத்தி அதிகமாக இருந்து சர்க்கரையின் விலை குறைவாக இருந்து கூட்டுறவு ஆலைகள் நட்டத்தில் இயங்கிய நேரத்திலும் மத்திய அரசு அறிவிக்கின்ற குறைந்தபட்ச விலையைவிட கூடுதலாக மாநில அரசின் ஆதார விலையை அறிவித்து அதற்குத் தேவையான மானியத்தையும் கூட்டுறவு ஆலைகளுக்கும் அரசே வழங்கி விவசாயிகளுக்கு நியாயமான கரும்பு விலை கிடைப்பதை இந்த அரசு உறுதி செய்துள்ளதை இப்போது அறிக்கை விடுபவர்கள் மறந்தது ஏனோ?.

2006–2007–ம் ஆண்டு இறுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் ஒட்டு மொத்த குவிந்த நட்டம் 1,270 கோடி ரூபாயாகும். 2007–2008 இறுதியில் இது 1,648 கோடி ரூபாயாக உயர்ந்து – 2008–2009–ம் ஆண்டு முடிவில் 1,625 கோடி ரூபாயாக உள்ளது.

அரசியல் உள்நோக்கம்

இருப்பினும் கரும்பு விவசாயிகளின் நலன் கருதி இந்த அரசு அவர்களுக்கு தொடர்ந்து நியாயமான ஆதார விலையை அளித்து வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். மராட்டியம், ஆந்திரா, கர்நாடகம் போன்ற மாநிலங்களில் மத்திய அரசு நிர்ணயிக்கும் விலைக்கு அதிகமாக மாநில அரசு பரிந்துரை விலை எதையும் நிர்ணயிப்பதில்லை.

தனியார் சர்க்கரை ஆலை அதிபர்கள் சர்க்கரை விலை அதிகமாக இருக்கும்போது கரும்புக்கு கூடுதலாக விலை கொடுப்பது போல இருந்தாலும், சர்க்கரையின் விலைகுறையும்போது கரும்புக்கு குறைந்த விலை கொடுப்பது வழக்கம் என்பதை இவர்கள் உணராமல் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் கூட்டுறவு ஆலைகள் கொள்முதல் செய்யும் கரும்புக்கு கூடுதலாகவே விலை நிர்ணயம் செய்யும் இந்த அரசின் கொள்கையைப் பாராட்டுவதற்குப் பதிலாக இந்தக் கரும்பு விவசாயிகள் சங்க கூட்டமைப்பினர் மாத்திரம் இந்த உண்மையை அறியாதது போல் அறிக்கை விடுத்திருப்பதுதான் அரசியல் உள்நோக்கம் கொண்டதாகும்.

இவ்வாறு அறிக்கையில் முதல்–அமைச்சர் கருணாநிதி கூறியுள்ளார்.

## முந்திரி ஏற்றுமதியை அதிகரிக்க நடவடிக்கை பிரதிநிதிகள் குழு ரஷ்யா செல்கிறது

எஸ் சனந்தகுமார்

கொச்சி

நடப்பு நிதி ஆண்டில் முந்திரி ஏற்றுமதி சரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக ரஷ்யாவிற்கான முந்திரி ஏற்றுமதியை உயர்த்த ஏற்றுமதியாளர்கள் திட்டமிட்டுள்ளனர். சென்ற நிதி ஆண்டில், நாட்டின் முந்திரி ஏற்றுமதி 1,09,523 டன்னாக இருந்தது. இதன் மதிப்பு ரூ.2,988.40 கோடியாகும்.

அமெரிக்கா–ஐரோப்பா

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள்தான் இந்தியாவிலிருந்து முந்திரியை அதிக அளவில் இறக்குமதி செய்து வருகின்றன. நடப்பு நிதி ஆண்டில், ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலான ஒன்பது மாதங்களில், இந்நாடுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட முந்திரி ஏற்றுமதி 82,053 டன்னாக குறைந்துள்ளது. முந்திரி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் 84,079 டன்னாக இருந்தது.

ஆக, முதல் ஒன்பது மாதங்களில் முந்திரி ஏற்றுமதி 2.40 சதவீதம் குறைந்துள்ளது. முந்திரிப் பருப்பு என்பது அத்தியாவசியப் பொருளாக இல்லை. உலக பொருளாதாரத்தின் தேக்கநிலையால், வளர்ச்சி அடைந்த பல நாடுகளில் முந்திரிக்கான தேவை குறைந்ததே ஏற்றுமதி சரிவடைந்துள்ளதற்கு முக்கிய காரணமாகும்.

அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய வாடிக்கையான சந்தைகளுக்கு ஏற்றுமதி சரிவடைந்துள்ள நிலையில், முந்திரி ஏற்றுமதியாளர்களின் கவனம் ரஷ்யா, கஜகஸ்தான் போன்ற நாடுகளின் மீது திரும்பியுள்ளது. பத்து பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று இந்த நாடுகளுக்கு சென்று இது தொடர்பாக ஆய்வினை மேற்கொள்ள உள்ளது.

முந்திரி ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சிலின் துணைத் தலைவர் ஹரிகிருஷ்ணன் நாயர் தலைமையில் இக்குழு செல்கிறது. மார்ச் 6–ந் தேதி புறப்படும் குழுவினர் ரஷ்யா மற்றும் கஜகஸ்தான் ஆகிய நாடுகளில் 11 நாள்கள் சுற்றுப் பயணம் செய்ய உள்ளனர்.

சென்ற நிதி ஆண்டில் முந்திரி ஏற்றுமதி குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்ந்திருந்தது. முந்திரி ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில் இத்துறையைச் சேர்ந்த பிரதிநிதிகளின் குழு ஒன்று இந்தோனேஷியா, கம்போடியா, வியட்நாம் போன்ற ஆசிய நாடுகளுக்கு சென்று வந்ததே இதற்கு முக்கிய காரணமாகும்.

சோவியத் யூனியன்

முன்னாள் சோவியத் யூனியன் பிரதேசம் நம் நாட்டிலிருந்து அதிக அளவில் முந்திரியை வாங்கி வந்தது. கடந்த 1981–ஆம் ஆண்டில் இந்த பிரதேசத்துக்கான முந்திரி ஏற்றுமதி 24,180 டன்னாக இருந்தது. இது, அவ்வாண்டின் மொத்த முந்திரி ஏற்றுமதியில் சுமார் 72 சதவீதமாகும்.

**விலையை கட்டுப்படுத்தும் வகையில் இறக்குமதி செய்த மூலச் சர்க்கரையை விற்க உ.பி. ஆலைகளுக்கு அனுமதி**

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

சென்ற 2009–ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து இதுவரையிலான காலத்தில், சர்க்கரை விலை இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது. இதனை கட்டுப்படுத்தும் வகையில், மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஓர் அங்கமாக, உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளால் இறக்குமதி செய்யப்பட்ட மூலச் சர்க்கரையை, இதர மாநிலங்களில் உள்ள சர்க்கரை ஆலைகளுக்கு விற்பனை செய்ய அந்த ஆலைகளுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளது. இதனையடுத்து, நாட்டில் சர்க்கரை அதிக அளவில் கிடைக்க வாய்ப்புள்ளது என்றும், இதனால் விலை குறையும் என்றும் இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

சென்ற நவம்பர் மாதத்தில், உத்தரபிரதேச மாநில அரசு, மூலச் சர்க்கரையிலிருந்து சர்க்கரை உற்பத்தி செய்ய அம்மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகளுக்கு தடை விதித்தது. இதனையடுத்து, இந்நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 8 லட்சம் டன் மூலச் சர்க்கரை துறைமுகங்களில் முடங்கியுள்ளது.

விற்பனை செய்ய அனுமதி

இதனையடுத்து, சென்ற ஜனவரி மாதத்தில் இந்த மூலச் சர்க்கரையை இதர மாநிலங்களிலுள்ள சர்க்கரை ஆலைகள் வாயிலாக சுத்திகரித்து பெற்றுக் கொள்ள மத்திய அரசு அனுமதி அளித்தது. ஆனால், இதர மாநிலங்களிலுள்ள சர்க்கரை ஆலைகள், மூலச் சர்க்கரையை சுத்திகரிப்பதற்கு அதிக கட்டணத்தை நிர்ணயம் செய்தன. எனவே, அத்திட்டம் வெற்றி பெறவில்லை. இதனால், உத்தரபிரதேசத்திலுள்ள சர்க்கரை ஆலைகள், இந்த மூலச் சர்க்கரையை வெளி மாநில ஆலைகளுக்கு விற்பனை செய்து விட அனுமதி அளித்துள்ளது.

மேலும், இந்த மூலச் சர்க்கரையை ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் விற்பனை செய்யவும் அனுமதி அளித்துள்ளது. இதர மாநிலங்களில் உள்ள சர்க்கரை ஆலைகளுக்கு மூலச் சர்க்கரையை விற்பனை செய்யும்போது, கூடுதலாக இறக்குமதி தீர்வை எதுவும் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டால், அதனை ஆலைகளுக்கு திரும்ப வழங்கவும் மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. இவ்வாண்டு ஜூன் மாதம் வரை இறக்குமதி செய்யப்படும் மூலச் சர்க்கரைக்கும் இந்த விதிமுறை பொருந்தும்.

**இதர உரங்களின் விலையை தொழிற்சாலைகளே நிர்ணயிக்கும்: யூரியா விலை 10 சதவீதம் உயர்வு மத்திய மந்திரி சபை கூட்டத்தில் முடிவு**

புதுடெல்லி, பிப்.19–

யூரியா விலையை 10 சதவீதம் அதிகரிக்க மத்திய மந்திரிசபை முடிவு செய்துள்ளது. யூரியா தவிர, பிற உரங்களின் விலையை உரத்தொழிற்சாலைகளே நிர்ணயித்துக் கொள்ளவும் அனுமதி அளித்துள்ளது.

புதிய திட்டம்

யூரியா தவிர, டி.ஏ.பி., எம்.ஓ.பி. காம்ப்ளக்ஸ் போன்ற உரங்களில், அவற்றில் உள்ள சத்துக்களின் அடிப்படையில், அவற்றைத் தயாரிக்கும் உரத் தொழிற்சாலைகளுக்கு மானியம் அளிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்த மத்திய அரசு திட்டமிட்டது. இதற்கு 'சத்து அடிப்படையிலான மானிய திட்டம்' என்று பெயர்.

டி.ஏ.பி., எம்.ஓ.பி. போன்ற உரங்களின் விலையை உரத் தொழிற்சாலைகளே நிர்ணயித்துக் கொள்ள இந்த திட்டம் வழி வகுக்கிறது.

இந்த திட்டத்துக்கு தமிழக முதல்–அமைச்சர் கருணாநிதி கடும் எதிர்ப்பு தெரிவித்தார். இதை அறிமுகப்படுத்தினால்,

உர விலை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதாகவும், எனவே, இத்திட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் பிரதமர் மன்மோகன்சிங், மத்திய நிதி மந்திரி பிரணாப் முகர்ஜி, காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி ஆகியோருக்கு அவர் கடிதம் எழுதினார். யூரியா விலையை 10 சதவீதம் அதிகரிக்கும் யோசனைக்கும் அவர் எதிர்ப்பு தெரிவித்து இருந்தார்.

யூரியா விலை உயர்வு

இந்நிலையில், நேற்று பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில், மத்திய மந்திரிசபை கூட்டம் நடைபெற்றது. அதில், யூரியாவுக்கான சில்லரை விலையை 10 சதவீதம் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டது.

ஏப்ரல் 1–ல் அமல்

மேலும், சத்து அடிப்படையிலான மானியம் திட்டத்துக்கு மந்திரிசபை ஒப்புதல் அளித்தது. இதன்படி, யூரியா தவிர்த்து, டி.ஏ.பி., எம்.ஓ.பி. போன்ற உரங்களில் உள்ள சத்துகளின் அடிப்படையில், அவற்றை தயாரிக்கும் உரத் தொழிற்சாலைகளுக்கு மானியம் அளிக்கப்படும். மேலும், இந்த உரங்களின் விலையை உரத் தொழிற்சாலைகளே நிர்ணயித்துக் கொள்ளலாம்.

இந்த முடிவுகள், ஏப்ரல் 1–ந் தேதியில் இருந்து அமலுக்கு வருகிறது. இருப்பினும், யூரியாவின் விலையை வழக்கம் போல மத்திய அரசே நிர்ணயிக்கும்.

இந்த முடிவை எடுப்பதற்கு, கூட்டத்தில் கலந்து கொண்ட மத்திய உரத்துறை மந்திரி மு.க.அழகிரி மற்றும் 2 மந்திரிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். காங்கிரஸ் மந்திரிகள் சிலரும் ஆட்சேபணை தெரிவித்தனர்.

இப்போதைக்கு உயராது

இதுகுறித்து, கூட்டம் முடிவடைந்த பிறகு, மத்திய மந்திரி அம்பிகா சோனி நிருபர்களிடம் கூறியதாவது:–

உர விலை விஷயத்தில், பெரும்பாலான மந்திரிகளின் கருத்துகளை பிரதமர் கேட்டார். இதுபற்றி விரிவாக விவாதிக்கப்பட்டு, ஒருமனதாக முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி, ஏப்ரல் 1–ந் தேதி முதல், யூரியாவின் அதிகபட்ச சில்லரை விலை, டன்னுக்கு ரூ.4,830–ல் இருந்து ரூ.5,310 ஆக உயர்த்தப்படுகிறது.

வரும் காரிப் பருவத்தில், உர விலையை உயர்த்த மாட்டோம் என்று உரத் தொழிற்சாலைகள் உறுதி அளித்துள்ளன. எனவே, இப்போதைக்கு நடப்பு விலையிலேயே உர விலை நீடிக்கும். உர விலையை தொழிற்சாலைகளே நிர்ணயிக்கலாம் என்று மந்திரிசபை முடிவெடுத்தாலும், விவசாயிகளின் நலன்களை பாதுகாக்கும் வகையில் மத்திய அரசு தலையிட உரிமை உண்டு.

இவ்வாறு அம்பிகா சோனி கூறினார்.

மருத்துவ சீட் அதிகரிப்பு

பொருளாதார விவகாரங்களுக்கான மந்திரிசபை குழு கூட்டத்தில், மாநில அரசு மருத்துவக் கல்லூரிகளை தரம் உயர்த்துவதற்கான மத்திய சுகாதார அமைச்சகத்தின் திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இத்திட்டம், மாநில அரசு மருத்துவக்கல்லூரிகளில் புதிய முதுநிலை மருத்துவ படிப்புகள் அறிமுகப்படுத்தவும், முதுநிலை மருத்துவ படிப்புகளில் மாணவர் ஒதுக்கீட்டு இடங்களை அதிகப்படுத்தவும் வழிவகை செய்கிறது. அதன்படி, நாட்டில் உள்ள 148 மாநில அரசு மருத்துவ கல்லூரிகளின், முதுநிலை மருத்துவ படிப்புகளில், கூடுதலாக 5 ஆயிரம் இடங்கள் உருவாக்கப்படும். இதன்மூலம், ஆண்டுதோறும், படித்து வெளிவரும் டாக்டர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

மத்திய அரசு நிதியுதவி

முதுநிலை படிப்புகளை தொடங்குவதற்கும், முதுநிலை மருத்துவ படிப்புகளில் இடங்களை அதிகப்படுத்துவதற்கும் மத்திய அரசு 75 சதவீத செலவுகளை ஏற்கும். மீதி செலவுகளை அந்தந்த மாநில அரசுகள் செய்ய வேண்டும். இதற்காக, மத்திய அரசு, மாநில அரசு மருத்துவ கல்லூரிகளுக்கு ரூ.1,350 கோடி நிதியுதவி வழங்கும். கல்லூரியின் தலைவரிடம் 2 தவணைகளாக இத்தொகை வழங்கப்படும். குறிப்பிட்ட காலத்துக்குள், முதுநிலை படிப்பை தொடங்காவிட்டாலோ, இடங்களை அதிகரிக்காவிட்டாலோ, இந்த நிதியை சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் திருப்பித்தர வேண்டி இருக்கும்.

நிதி தட்டுப்பாட்டில் இயங்கி வரும் ஏர் இந்தியா நிறுவனத்தில் ரூ.800 கோடிக்கு பங்கு முதலீடு செய்ய பொருளாதார விவகாரங்களுக்கான மந்திரிசபை குழு ஒப்புதல் அளித்தது. ஏர் இந்தியாவை நடத்தும் தேசிய விமான போக்குவரத்து நிறுவனத்திடம் (என்ஏசிஐஎல்) இத்தொகை, இரண்டு மாத தவணைகளாக வழங்கப்படும்.

*துப்புரவு பணியாளர்கள் மறுவாழ்வு திட்டம்*

*தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட 18 மாநிலங்களில் மனித கழிவுகளை அகற்றும் துப்புரவு பணியாளர்களின் மறுவாழ்வுக்கான மத்திய அரசின் சுயவேலைவாய்ப்பு திட்டத்தின் அமலாக்கம் குறித்து மத்திய மந்திரிசபை ஆய்வு செய்தது. இத்திட்டத்தின் கீழ் எஞ்சிய பயனாளிகளையும் சேர்ப்பதற்கான காலவரையறையை வரும் மார்ச் 31 என மாற்றி அமைத்து மந்திரிசபை ஒப்புதல் அளித்தது.*

*மார்ச் 31–ந் தேதிக்கு பிறகு, யாராவது பயனாளிகள் இருந்தாலும் அவர்களையும் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ள மந்திரிசபை ஒப்புதல் அளித்தது.*

*ரூ.1,133 கோடி செலவில், மாநில அரசுகளின் வணிக வரி வசூல் பணிகளை கம்ப்யூட்டர் மயமாக்கும் திட்டத்துக்கும் மத்திய மந்திரிசபை ஒப்புதல் அளித்தது.*

மாலை மலர் BETA

**கரும்பு விவசாயிகள் அறிக்கை அரசியல் உள்நோக்கம் கொண்டது; கருணாநிதி அறிக்கை**

வெள்ளிக்கிழமை, பெப்ரவரி 19, 4:35 AM ISசென்னை, பிப்.19-

முதல்-அமைச்சர் கருணாநிதி வெளியிட்டுள்ள கடிதம் வடிவிலான அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கரும்பு விலை பிரச்சினையில் ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் ஏதோ பள்ளிக் கூடத்துச்சின்னப் பிள்ளைகளைப் போல சண்டை போடுவதாக கற்பனை செய்து கொண்டு; தாங்கள் என்னவோ இதிலெல்லாம் தலையிடாத வகுப்பறை சட்டாம்பிள்ளைகளைப் போலக்கருதிக் கொண்டு; "அரசியல் கட்சிகளின் கருத்து வேறுபாடுகளைக் கரும்பு உற்பத்தியாளர்களிடம் திணிப்பதா?" என்ற ஒரு கேள்வியைக் கேட்டு நீண்டதோர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

தி.மு.க.வை காரணம் இல்லாமல் எதிர்த்துக்கொண்டிருக்கிற சில பத்திரிகைகள் அந்த அறிக்கையை பெரிய எழுத்துக்களிலே உற்சாகத்தோடு வெளியிட்டிருக்கிறார்கள்.

அந்த அறிக்கையில் தமிழகத்தில் முன்னாள் ஆட்சியில் அரசு ஆதரவு விலை அளிக்காமல் இருந்தது தவறு என்று சுட்டிக்காட்டுவதோடு - உத்தரப் பிரதேசத்திலும், மராட்டியம், கர்நாடகம், ஆந்திரா போன்ற மாநிலங்களிலும் 2,100 ரூபாய் முதல் 2,300 ரூபாய் வரை விலை கொடுக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

விலையைச் சொல்லியிருக்கிறார்களே தவிர, அங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற கரும்பின் "பிழி திறன்" என்ன என்பதைப் பற்றி அவர்கள் யாரும் விவரிக்கவில்லை. முதலில் ஒரு விவரத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். கரும்புக்கு விலை அதிகம் கொடுக்க வேண்டுமென்று கேட்கின்ற விவசாயிகள் யாரிடம் கேட்கிறார்கள்? அரசாங்கத்திடம் கேட்கிறார்களா? அல்லது கரும்பை வாங்கி அரவை செய்து சர்க்கரையாக விற்பனை செய்கின்ற ஆலை அதிபர்களிடம் கேட்கிறார்களா? என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

கரும்பு விவசாயிகள் கேட்கிற விலையை அறிவித்துவிட அரசு தயாரானால்கூட, அந்த விலை கொடுக்க தங்களுக்கு கட்டுப்படி ஆகவில்லை என்று திட்டவட்டமாக கூறுகின்ற சர்க்கரை ஆலைகளின் கூக்குரலுக்கு அரசு என்ன பதில் சொல்ல வேண்டும்? என்ன பதில் சொன்னால் அந்தக் கூக்குரல் அடங்கும் என்பதையோ அல்லது கரும்பு விலை அறிவிப்பு என்பது - அந்த விலையை அரசே கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்கப் போகிற விலை என்று பொருள் அல்ல; அப்படி கூட்டுறவு ஆலைகளுக்காக அரசே கொடுக்க முன் வந்தால் கூட; அதேபோன்ற விலையை தனியார் ஆலை அதிபர்கள் தங்களுக்குக் கட்டுப்படி ஆகாது என்று கூறினால் அதனால் பாதிக்கப்படப் போவதும் கரும்பு விவசாயிகள்தானே?.

கரும்புக்கு நிர்ணயிக்கப்படுகிற விலை யாரால் யாருக்குக்கொடுக்கப்பட வேண்டுமென்பதை மறந்து விட்டோ அல்லது மறைத்து விட்டோ மக்கள் மத்தியில் ஒரு சர்ச்சையை உருவாக்குவது கரும்பு விவசாயிகளுக்கு நல்லது அல்ல. சர்க்கரை உற்பத்தி செய்யும் ஆலைகளுக்கும் நல்லது அல்ல.

உத்தர பிரதேசம், மராட்டியம், கர்நாடகம், ஆந்திரா போன்ற மாநிலங்களில் 2,100 ரூபாய் முதல் 2,300 ரூபாய் வரை தருகிறார்கள் என்றால் எத்தகைய பிழி திறன் கொண்ட கரும்புக்கு என்பதைக் கூறியிருக்க வேண்டாமா?. "அரசு நிதியில் இருந்து இலவச டி.வி., ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, அரசு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு, 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டம் போன்றவைகளுக்கு வாரி வழங்கும் இந்த அரசு, லாபத்தில் இயங்கும் சர்க்கரை ஆலைகளை விலையை உயர்த்திக் கொடுக்க ஆணையிடாதது விவசாயிகள் தற்கொலைக்கு வித்திட்டது" என்று ஒரு கற்பனைக் கதையையும் இந்த அறிக்கையிலே அவர்கள் இணைத்திருக்கிறார்கள்.

அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற மேற்கண்ட திட்டங்கள் அனைத்தும் மக்கள் நலத்திட்டங்கள்தான் என்பதை அனைவரும் அறிவர். இவைகளை எல்லாம் கிண்டல் செய்கின்ற இந்த அறிக்கையாளர்கள் விவசாயிகளுக்கான 7 ஆயிரம் கோடி

ரூபாய்க்கான கூட்டுறவு கடன்களை ரத்து செய்து அரசு அறிவித்து நடைமுறைப்படுத்தியதை மட்டும் தங்களுக்கு வசதியாக மறந்தது ஏனோ?.

தற்போது விவசாயிகளுக்கு அறவே வட்டியில்லாத கூட்டுறவுப் பயிர்கள் கடன் கொடுப்பதையும் நினைவிலே கொள்ளாதது ஆச்சரியம்தான்.

சர்க்கரைத் தொழிலில் உற்பத்தி சில ஆண்டுகளிலே அதிகமாக இருக்கும், சில ஆண்டுகளிலே குறைவாக இருக்கும். அது மாறி மாறி வருகின்ற ஒன்று. சர்க்கரை உற்பத்தி அதிகமாக இருந்து சர்க்கரையின் விலை குறைவாக இருந்து கூட்டுறவு ஆலைகள் நட்டத்தில் இயங்கிய நேரத்திலும் மத்திய அரசு அறிவிக்கின்ற குறைந்தபட்ச விலையைவிட கூடுதலாக மாநில அரசின் ஆதார விலையை அறிவித்து அதற்குத் தேவையான மானியத்தையும் கூட்டுறவு ஆலைகளுக்கும் அரசே வழங்கி விவசாயிகளுக்கு நியாயமான கரும்பு விலை கிடைப்பதை இந்த அரசு உறுதி செய்துள்ளதை இப்போது அறிக்கை விடுபவர்கள் மறந்தது ஏனோ?.

2006-2007-ம் ஆண்டு இறுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் ஒட்டு மொத்த குவிந்த நட்டம் 1,270 கோடி ரூபாயாகும். 2007-2008 இறுதியில் இது 1,648 கோடி ரூபாயாக உயர்ந்து - 2008-2009-ம் ஆண்டு முடிவில் 1,625 கோடி ரூபாயாக உள்ளது.

இருப்பினும் கரும்பு விவசாயிகளின் நலன் கருதி இந்த அரசு அவர்களுக்கு தொடர்ந்து நியாயமான ஆதார விலையை அளித்து வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். மராட்டியம், ஆந்திரா, கர்நாடகம் போன்ற மாநிலங்களில் மத்திய அரசு நிர்ணயிக்கும் விலைக்கு அதிகமாக மாநில அரசு பரிந்துரை விலை எதையும் நிர்ணயிப்பதில்லை.

தனியார் சர்க்கரை ஆலை அதிபர்கள் சர்க்கரை விலை அதிகமாக இருக்கும்போது கரும்புக்கு கூடுதலாக விலை கொடுப்பது போல இருந்தாலும், சர்க்கரையின் விலைகுறையும்போது கரும்புக்கு குறைந்த விலை கொடுப்பது வழக்கம் என்பதை இவர்கள் உணராமல் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் கூட்டுறவு ஆலைகள் கொள்முதல் செய்யும் கரும்புக்கு கூடுதலாகவே விலை நிர்ணயம் செய்யும் இந்த அரசின் கொள்கையைப் பாராட்டுவதற்குப் பதிலாக இந்தக் கரும்பு விவசாயிகள் சங்க கூட்டமைப்பினர் மாத்திரம் இந்த உண்மையை அறியாதது போல் அறிக்கை விடுத்திருப்பதுதான் அரசியல் உள்நோக்கம் கொண்டதாகும்.இவ்வாறு அறிக்கையில் முதல்-அமைச்சர் கருணாநிதி கூறியுள்ளார்.